# முன்னேற்ற அறிக்கை

2011

தேசிய கல்வி நிறுவகம்
மகரகம

# முன்னேற்ற அறிக்கை
# 2011

## 1.0 அறிமுகம்

தேசிய கல்வி நிறுவகமானது நாட்டின் பொதுக்கல்வி மற்றும் ஆசிரியர் கல்விக்கான கலைத்திட்ட அபிவிருத்தி, கல்வித்துறையில் ஈடுபட்டுள்ளவர்களின் வாண்மை விருத்தி, மற்றும் கல்விக் கொள்கைகளை அமுல்படுத்துவதிலுள்ள பிரச்சினைகளை ஆய்வு செய்வதற்காகவும் 1985 ஆம் ஆண்டு 28ஆம் இலக்க உறுப்புரை பாராளுமன்றச் சட்டத்தினால் உருவாக்கப்பட்ட அமைப்பாகும். 2011 ஆம் ஆண்டு மேற்கூறப்பட்ட பொறுப்புக்களுக்கமைய 120 செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தியது. நடப்பாண்டுக்கான நிதியளிப்புகள் பிரதானமாக ஊழியர்களின் வேதனத்திற்காகச் செலவிடப்பட்டன. ஒரு பகுதி நிறுவகத்தின் பராமரிப்பிற்காகவும் சில செயற்றிட்ட நடவடிக்கைகளுக்காகவும் பயன்படத்தப்பட்டன. மேற்குறிப்பிட்ட செயற்றிட்டங்களுக்கான நிதியளிப்புகள், உலக வங்கியினால் நிதியளிக்கப்படுகின்ற கல்வித்துறை சார்ந்த அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்ட நிதி உதவி (ESDG), யுனிசெப்(UNICEF), ஜெர்மன் சர்வதேச ஒத்துழைப்பகம் (GIZ) மற்றும் தேசிய நிறுவகத்தினால் நடாத்தப்படும் சான்றிதழ் கற்கை நெறிகள் தொடக்கம் முதுதத்துவமாணி கற்கை நெறிகள் மூலம் பெறப்பட்டவையாகும்.

2011 ஆம் வருட ஆரம்பத்தில் தேசிய கல்வி நிறுவகத்தின் புதிய நிறுவக பேரவையானது பல்துறை சார்ந்த நிபுணத்துவ அங்கத்தவர்களைக் கொண்டு கௌரவ கல்வி அமைச்சர் அவர்களினால் நியமனம் செய்யப்பட்டது. அத்துடன் தேசிய கல்வி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகமாக பேராசிரியர் டப்ளியு. எம். அபேரத்ன பண்டார அவர்கள் நியமனம் செய்யப்பட்டிருந்ததுடன் இந்நியமனத்தினால் நிறுவகத்தின் இயலளவை அதிகரித்துக் கொள்ளும் வகையில் பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இவ்வறிக்கையானது 2011 ஆம் ஆண்டில் தேசிய கல்வி நிறுவகத்தின் செயற்பாடுகளின் முன்னேற்றத்தினை விபரிக்கின்றது.

## 2.0 தேசிய கல்வி நிறுவகத்தின் நிறுவகக் கட்டமைப்பு

## 2.1 நிறுவகப் பேரவை

தேசிய கல்வி நிறுவகத்தின் சட்டத்திற்கமைவாக நிறுவகப் பேரவையானது கீழ்வரும் அதிகாரங்களைக் கொண்டிருக்கின்றது.

- விதந்துரைக்கப்பட்ட விதிகளுக்கமைவாக நிறுவகத்திற்குத் தேவையான ஆட்சேர்ப்புச் செய்தல்

- ஊழியர்களது கூலிகள், சம்பளங்கள், கொடுப்பனவுகள், நியதிகள், நிபந்தனைகள் என்பவற்றைத் தீர்மானித்தல்.

- ஒழுக்க வரன்முறையை தயாரித்தல்.

- ஊழியர்களுக்கான சேமலாபநிதி, ஊழியர் நலன்கள் என்பவற்றை உருவாக்கி அதனை செயற்படுத்தி அந்நிதியயங்களுக்குத் தேவையான பங்களிப்பினைச் செய்தல்.

2011 ஆம் ஆண்டில் கீழ்வரும் அங்கத்தவர்களை நிறுவகப் பேரவையானது கொண்டிருக்கின்றது.

திரு. எச். எம். குணசேகர **தலைவர்**
(செயலாளர் - கல்வியமைச்சு)

பேராசிரியர் டப்ளியு. எம். அபேரத்ன பண்டார **உறுப்பினர்**
(பணிப்பாளர் நாயகம் - தேசிய கல்வி நிறுவகம்)

பேராசிரியர் எஸ். சந்திரசேகரம் **உறுப்பினர்**
(முன்னாள் பீடாதிபதி, கல்விப் பீடம் - கொழும்பு பல்கலைக்கழகம்)

பேராசிரியர் அர்ஜுன டீ. சில்வா **உறுப்பினர்**
(பேராசிரியர், மருத்துவப் பீடம் - களனிப் பல்கலைக்கழகம்)

பேராசிரியர் முதியன்சே திசாநாயக்க **உறுப்பினர்**
(சிரேஷ்ட பேராசிரியர்/ பணிப்பாளர் - நுண்கலைப் பல்கலைக்கழகம்)

பேராசிரியர் ரொலன்ட் அபயபால **உறுப்பினர்**
(சிரேஷ்ட விரிவுரையாளர், கல்விப் பீடம் - கொழும்பு பல்கலைக்கழகம்)

கலாநிதி டீ. ஏ. பியசிறி **உறுப்பினர்**
(பணிப்பாளர் நாயகம், தொழில்நுட்பம் மற்றும் 3ஆம் நிலைக் கல்வி ஆணைக்குழு)

திரு. மஞ்சுல மக்கும்பர **உறுப்பினர்**
(வழக்கறிஞர்)

திரு. ஆர். உடுவாவெல **உறுப்பினர்**
(பணிப்பாளர், தேசிய பாதீட்டுத் திணைக்களம்)

திரு. பி. ரணேபுர **உறுப்பினர்**
(மேலதிகச் செயலாளர், கல்வி உயர்கல்வி அமைச்சு) (15.08.2011 இலிருந்து)

கலாநிதி சாரங்க அழகப் பெரும **உறுப்பினர்**
(வைத்தியர், ஆதார வைத்தியசாலை, கிரிபத்கொடை) (15.08.2011 இலிருந்து)

திருமதி. வீ. டீ. சீ. பீ. பெரேரா **(நிறுவகப் பேரவைச் செயலாளர்)**
(பிரதம செயற்றிட்ட அதிகாரி, ஆங்கில மொழித் துறை தேசிய கல்வி நிறுவகம்)

## 2.2 2011 ஆம் ஆண்டின் கல்வி அலுவல்கள் சபை

நிறுவகப் பேரவைக்கு மேலதிகமாக, நிறுவகத்தின் சகல கல்வி விடயங்கள் தொடர்பான ஆலோசனை வழங்குவதற்காகவும் கல்வி முகாமைத்துவம், நிர்வாகம் மற்றும் வேறு துறைகளில் பாண்டித்தியம் பெற்ற அறிஞர்களைக் கொண்ட ஒரு கல்வி அலுவல்கள் சபை செயற்படுவதுடன், இக்கல்வி அலுவல்கள் சபையினால் நிறுவகத்தின் பின்வரும் பணிகளுக்கு ஆலோசனை, மேற்பார்வை, தலைமைத்துவம் என்பன வழங்கப்படுகின்றன.

- அனைத்துக் கல்வி அலுவல்கள் தொடர்பிலும் பேரவைக்கு ஆலோசனைகள் வழங்குதல்.
- கல்வி அலுவல்கள் தொடர்பில் பேரவையினால் விதிக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான விடயங்களை ஆய்வு செய்து அறிக்கையிடல்.
- நிறுவகத்தினால் நடாத்தப்படும் பாடநெறிகள், பயிற்சி வேலைத்திட்டங்கள், பரீட்சைகள் தொடர்பான விதந்துரைகளை நிறுவகப் பேரவைக்கு முன்வைத்தல்.
- பல்வேறு பாடநெறிகளுக்கான ஆட்சேர்ப்பு வரையறைகள், கட்டணங்கள் தொடர்பாகப் பேரவைக்கு விதந்துரைத்தல்.
- பல்வேறு பாடநெறிகளை நடத்துதல், அவற்றுக்கான பரீட்சை சட்டதிட்டங்களை வகுத்தல், மேலும் அனைத்து பயனாளிகள் தொடர்பான விதந்துரைகளை பேரவைக்கு முன்வைத்தல்.
- நிறுவகத்தினால் நடாத்தப்படும் பரீட்சைகளின்போது பரீட்சகர்களாக நியமிப்பதற்குப் பொருத்த மானவர்களின் பெயர்களை பேரவைக்குச் சிபாரிசு செய்து வழங்குதல்.
- கல்வி அலுவல்கள் தொடர்பான புலமைப் பரிசில்கள், பதக்கங்கள், படிகங்களை வழங்குவதுடன் அதற்கான சட்டதிட்டங்கள் தொடர்பாகவும் பேரவைக்கு விதந்துரைத்தல்.
- புலமைப்பரிசில்கள், பரிசுகள், படிகங்கள், பதக்கங்கள் முதலானவற்றைப் பெற்றுக் கொள்ளக்கூடிய தகுதியானவர்களை பேரவைக்குப் பரிந்துரை செய்தல்.
- பேரவையின் அனுமதியுடன் சபைக்குப் பொருத்தமானவர்களை நியமனம் செய்தல்.

**2011 இற்கான கல்வி அலுவல்கள் சபை பின்வரும் அங்கத்தவர்களைக் கொண்டிருந்தது.**

பேராசிரியர். டப்ளியு. ஆரியதாச சில்வா **தலைவர்**
(முன்னாள் பீடாதிபதி, கொழும்பு பல்கலைக்கழகம்)

பேராசிரியர் டப்ளியு. எம். அபேரத்ன பண்டார **உறுப்பினர்**
(பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்)

பேராசிரியர் எஸ். விதான பத்திரன **உறுப்பினர்**
(விரிவுரையாளர், நுண் உயிரியற் துறை - களனிப் பல்கலைக்கழகம்)

பேராசிரியர் நாரத வர்ணசூரிய **உறுப்பினர்**
(முன்னாள் உப வேந்தர் - ஸ்ரீ ஜயவர்தனபுரப் பல்கலைக்கழகம்)

திரு. ஆர்.எஸ். மெதகம **உறுப்பினர்**
(ஓய்வு பெற்ற பணிப்பாளர் நாயகம், கல்விச் சீர்திருத்த அமுல்பத்தல் அலகு, கல்வி அமைச்சு)

திரு. அனுர எதிரிசிங்ஹ **உறுப்பினர்**
(பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தேசிய மதிப்பீடு, பரீட்சைகள் சேவை)

திரு. திஸ்ஸ நந்தசேன **உறுப்பினர்**
(செயலாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு)

வீ. முத்துகுமாரசுவாமி **உறுப்பினர்**
(அதிபர், இந்துக் கல்லூரி - கொழும்பு 04)

திரு. டப்ளியு. எம். என். ஜே. புஷ்பகுமார **உறுப்பினர்**
(ஆணையாளர் நாயகம், கல்வி வெளியீட்டுத் திணைக்களம்)

கலாநிதி. பீ. ஸீ. பி. ஜவ்பர் **உறுப்பினர்**
(சிரேஷ்ட விரிவுரையாளர், கல்விப் பீடம், திறந்த பல்கலைக்கழகம், இலங்கை)

திரு. திஸ்ஸ ஹேவாவித்தான **உறுப்பினர்**
(சிரேஷ்ட ஆணையாளர், ஆசிரியர் கல்வி, கல்வி அமைச்சு)

கலாநிதி (திருமதி). டி. ஏ. ஆர். ஜே. குணசேகர **உறுப்பினர்**
(உதவிப் பணிப்பளார் நாயகம், திட்டமிடல், ஆராய்ச்சி அபிவிருத்திப் பீடம்
- தேசிய கல்வி நிறுவகம்)

திரு. எல். எச். விஜேசிங்ஹ **உறுப்பினர்**

(உதவிப் பணிப்பளார் நாயகம், விஞ்ஞான தொழில்நுட்ப பீடம் (22.03.2011 இலிருந்து
- தேசிய கல்வி நிறுவகம்) 05.07.2011 வரை)

திரு. டப்ளியு. சியம்பலாகொட **உறுப்பினர்**
(உதவிப் பணிப்பாளர் நாயகம், மொழிகள், மானுடவியல் மற்றும் *(31.03.2011 வரை)*
சமூக விஞ்ஞான பீடம் - தேசிய கல்வி நிறுவகம்)

திரு. ஐ.எம்.கே.பி. இலங்கசிங்க **உறுப்பினர்**
(உதவிப் பணிப்பளார் நாயகம், ஆசிரியர் கல்வி தலைமைத்துவ அபிவிருத்திப் பீடம்
- தேசிய கல்வி நிறுவகம்) (12.04.2011 இலிருந்து)

திரு. எஸ். அட்டுகொட **உறுப்பினர்**
(உதவிப் பணிப்பளார் நாயகம், மாற்றுக் கல்விக்கான பீடம் *(22.03.2011 இலிருந்து*
- தேசிய கல்வி நிறுவகம்) *20.06.2011 வரை)*

கலாநிதி (திருமதி). என் வன்னியாராச்சி **உறுப்பினர்**
(உதவிப் பணிப்பளார் நாயகம், மாற்றுக் கல்விக்கான பீடம் *(20.06.2011 இலிருந்து)*
- தேசிய கல்வி நிறுவகம்)

கலாநிதி ஜி. கொடிதுவக்கு **உறுப்பினர்**
(பதில் உதவிப் பணிப்பளார் நாயகம், மொழிகள், மானுடவியல் *(01.04.2011 இலிருந்து)*
மற்றும் சமூக விஞ்ஞான பீடம் - தேசிய கல்வி நிறுவகம்)

திரு. எம். எப். எஸ். பி. ஜெயவர்தன **உறுப்பினர்**
(பதில் உதவிப் பணிப்பளார் நாயகம், விஞ்ஞான தொழில்நுட்ப பீடம் (06.09.2011 இலிருந்து)
- தேசிய கல்வி நிறுவகம்)

திருமதி. வீ. டீ. சீ. பீ. பெரேரா **(நிறுவகப் பேரவைச் செயலாளர்)**
(பிரதம செயற்றிட்ட அதிகாரி,
ஆங்கிலமொழித் துறை தேசிய கல்வி நிறுவகம்)

## 2.3 பணிப்பாளர் நாயகத்தின் காரியாலயம்

பணிப்பாளர் நாயகத்தின் செயலகமும் உள்ளகக் கணக்காய்வு அலகும் பணிப்பாளர் நாயகத்தின் நேரடி மேற்பார்வையின் கீழ் இயங்குகின்றது.

பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகமானது நிறுவக பேரவையின் செயற்பாடு, கல்வி அலுவல்கள் சபையினதும் செயற்பாடுகளை ஒன்றிணைக்கின்றது. இந்தக் காலப்பகுதியில் 12 பேரவை கூட்டங்களும் 13 கல்வி அலுவல்கள் சபைக் கூட்டங்களும் இடம்பெற்றன.

உள்ளகக் கணக்காய்வு அலகானது உள்ளக கணக்காய்வை மேற்கொள்வதுடன் அகக் கட்டுப்பாடு, வெளிப்படுத்துகை என்பவற்றினூடாக நிறுவக முகாமைக்கு உதவி புரிகின்றது.

## 2.4 பீடங்களும் துறைகளும்

கீழே தரப்படும் பீடங்களினதும் துறைகளினதும் உள்ளடக்கங்களானவை தற்போதைய நிறுவக கட்டமைப்பிற்கமைவானவை. அதற்கமைய 2011 ஆம் ஆண்டில் நிறுவகக் கட்டமைப்பானது கீழ்வருமாறு ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது.

**2.4.1 மொழிகள், மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்**

சிங்கள மொழித்துறை
தமிழ் மொழித்துறை
ஆங்கில மொழித்துறை
அழகியற் துறை
சமயங்கள் துறை
சமூகவியற் துறை
முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி மற்றும் ஆரம்பக்கல்வித் துறை
மொழி இணைப்பு அலகு

**2.4.2 விஞ்ஞானத் தொழில்நுட்ப பீடம்**

விஞ்ஞானம், சுகாதாரமும் உடற்கல்வியும் துறை
கணிதத் துறை
தொழில்நுட்பக் கல்வித் துறை
வணிகத் துறை
தகவற் தொழில்நுட்பத் துறை

**2.4.3 கல்வித் தலைமைத்துவ அபிவிருத்தி, ஆசிரியர் கல்வி பீடம்**

பாடசாலை முகாமைத்துவத் துறை
கல்வி நிர்வாகத் துறை
ஆசிரியர் வலுவூட்டல் துறை
நிறுவன அபிவிருத்தித் துறை
பரீட்சைகள் துறை
வழிகாட்டல் ஆலோசனை அலகு

**2.4.4 அனைவருக்கும் கல்வி பீடம்**

திறந்த பாடசாலைகள் துறை
இலத்திரனியல் பரவற் துறை
நூலக வெளியீட்டுத் துறை
உட்படுத்தற் கல்வித் துறை

**2.4.5 ஆராய்ச்சி அபிவிருத்தி, திட்டமிடற் பீடம்**

ஆராய்ச்சி அபிவிருத்தித் துறை
திட்டமிடல் மதிப்பீட்டுத் துறை
வெளியுறவு முகவரலகு

**2.4.6 பொது நிதி, தொழில்நுட்பப் பிரிவு**

நிதித்துறை
நிர்வாகத்துறை
பொறியியற் சேவைகள் துறை

- தொடர் கூட்டங்களினூடாக தேசிய கல்வி நிறுவகத்திற்கும் கல்வி அமைச்சிற்குமிடையிலான ஒன்றிணைவு சார்ந்த செயற்பாடுகள் விருத்தி செய்யப்பட்டன.

- வெளியேயுள்ள தகுதி வாய்ந்தவர்களையும் கவரக்கூடிய வகையில் ஆளணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் எதிர்பார்க்கக்கூடிய புதிய ஆளணியும் ஆளணிப் பதவிப் பெயரும் புதிய நிர்வாகக் கட்டமைப்பினை அபிவிருத்தி செய்வதனூடாக ஏற்படுத்தப்பட்டது.

- பட்டப்பின் படிப்பு கல்வி டிப்ளோமாவைப் பூர்த்தி செய்து, தேசிய கல்வி நிறுவகத்தில் 05 வருட அனுபவத்தைக் கொண்டிருந்த 21 உதவிச் செயற்றிட்ட அதிகாரிகள், செயற்றிட்ட அதிகாரிகளாகப் பதவி உயர்த்தப்பட்டனர்.

- ஆங்கிலம், தமிழ் மற்றும் தகவல் தொழில்நுட்ப நிகழ்ச்சித்திட்டங்கள், நிறுவக ஊழியர்களின் வினைத்திறனானதும், விளைதிறனானதுமான செயற்பாடுகளின் முன்னேற்றத்திற்காக ஆரம்பிக்கப்பட்டன.

- 36 நிறுவக ஊழியர்களின் ஆற்றலை விருத்தி செய்வதற்காகப் பொதுநலவாய ஊடக நிறுவனத்தின் ஒன்றிணைவுடன் பல்லூடகச் செயலமர்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

- இலத்திரனியல் முகாமைத்துவ முறையின் ஓர் அங்கமான மாணவர் தகவல் முறைமை (SIS) நிறுவக உள்ளக ஊழியர்களினால் 5.8 மில்லியன் சேமிப்பை ஏற்படுத்தி வடிவமைக்கப்பட்டது. இதன் மூலமாக நிறுவக பாடநெறிகளை மிகவும் வினைத்திறனான முறையில் முகாமைச் செய்யப்படவும் வெளிப்படையானதாக மாற்றியமைக்கவும் முடியுமானதாயிருந்தது.

- முரண்பாட்டிற்கு பின்னதான சமதானத்தை கட்டியெழுப்புவதற்கான நிகழ்ச்சிகள் பேண்தகு அபிவிருத்தியினை நோக்கியதான தர மேம்பாடு மற்றும் புத்தாக்கத்திற்கான ஆசிரியர் கல்வி நிகழ்ச்சிகள் இந்தியா யுனெஸ்கோ நிறுவனத்தின் ஒன்றிணைவுடன் ஆரம்பிக்கப்பட்டன. இதன்படி 59 ஆசிரியர் கல்வியியலாளர்கள் தேசிய கல்வி நிறுவக அதிகாரிகள் உள்ளடங்கலாக பயிலுனர்களை பயிற்றுவிப்பவர்களாக பயிற்றுவிக்கப்பட்டனர். அத்துடன் 1500 தேசிய கல்வியற் கல்லூரிகளின் மாணவர்களும் 2011 ஆம் ஆண்டில் பயிற்றுவிக்கப்பட்டனர்.

- சனாதிபதி முன்னெடுப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் தொழில்நுட்ப உதவியுடன் வாழ்க்கைத் தேர்ச்சிக்கான ஆங்கிலம், 7, 8 மற்றும் 9 ஆம் தரங்களின் பாடசாலை மட்டக் கணிப்பீட்டின் கேட்டல், பேச்சுத்திறன்களுக்கான கருவிகளாகவும் ஆங்கில பேச்சின் அடிப்படை கூறாகவும் தயாரிக்கப்பட்டன.

- நூலகத்திலிருந்து பயனாளிகள் முதன்மையான சேவையினைப் பெற்றுக் கொள்வதற்காக. 'வினிசிஸ்' முறைமையை உள்ளடக்கியதாக மாற்றியமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

- கல்வித்துறை அபிவிருத்தி மூலதன உதவுத்தொகையான ரூபா. 15 மில்லியன்களின் மேலதிக நிதி உதவியுடன் பரீட்சைகள் துறையினதும் அச்சகத்தினது உபகரணத் தேவையினை பூர்த்தி செய்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. மேலதிகமாக நூலகத்திற்குரிய கல்வி, பல்வேறு துறைசார்ந்த நூல்களாகவும், பருவகால வெளியீடுகளினூடாகவும் சில கல்வி மென்பொருட்களாகவும் ரூபா ஒரு மில்லியன்கள் பெறுமதியில் இற்றை நிலைப்படுத்தப்பட்டன

- தேசிய கல்வி நிறுவகமானது தனது தொண்டர் சேவைகளை இலங்கை விமானப் படையினரின் ஆற்றலை விருத்தி செய்வதற்காக விரிவுபடுத்தி இருந்ததுடன் இதன்போது 100 பயிற்றுவிப்பு பயிலுனர்கள் கல்வி உளவியற் பயிற்சிகளைப் பெற்றுக் கொண்டனர்.

- தெற்காசியாவின் ஆசிரியர் விருத்திக்கான நிலையத்தை இலங்கையில் தாபிப்பதற்கான ஆரம்பக் கட்ட வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. இதன் மூலம் தெற்காசிய பிராந்தியத்தின் ஆசிரியர் விருத்தி செயன்முறைக்கு ஆலோசனைகள் வழங்கல், அபிவிருத்திக்கான புத்தாக்க அணுகுமுறைகளை வலியுறுத்தி ஆராய்ச்சி, தகவல்களை பரிமாறிக் கொள்ள ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, மாலைதீவு, நேபாளம், பாகிஸ்தான், இலங்கை ஆகிய தெற்காசிய நாடுகளின் ஒத்துழைப்பை யுனெஸ்கோவின் ஆதரவுடன் பெற்றுக்கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

## 4.0 கலைத்திட்ட அபிவிருத்தி

மொழிகள் மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடமும் விஞ்ஞான தொழில்நுட்ப பீடமும் நாட்டின் பொதுக் கல்வி தொடர்பான சகல விடயங்களுக்கும் பொறுப்பு வகிக்கின்றது.

மொழிகள் மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடத்தின் கீழுள்ள ஏழு துறைகளினூடாகவும் மொழிகள் ஒருங்கிணைப்பு அலகின் மூலமும் விஞ்ஞான தொழில்நுட்ப பீடத்தின் கீழுள்ள 05 துறைகளின் மூலமும் 2011 ஆம் ஆண்டில் எழுபது செயற்றிட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன.

- சமூக, கலாசார, பொருளாதார, தொழில்நுட்பத் தேவைகளுக்குப் பொருத்தமான கலைத் திட்டத்தைத் திட்டமிடல், அபிவிருத்தி செய்தல், நவீனமயப்படுத்தல். கலைத் திட்டடத்தில் புத்தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில், அர்த்தமுள்ளதும் செயன்முறையானதுமான கற்றல், கற்பித்தல் செயன்முறைகளுக்காகப் புதிய நுணுக்கங்களை அறிமுகப்படுத்தல்.

- கலைத்திட்டத்தை விருத்திசெய்து அமுல்ப்படுத்தும் செயற்பாடுகளில் ஈடுபடுவோரின் தொழிற் தேர்ச்சியை முன்னேற்றுதல்.

- கல்வியின் தரவிருத்திக்குப் பங்களிப்புச் செய்யும் ஆய்வுகளை அமுல்ப்படுத்துவதற்கான கலைத்திட்ட விருத்தித் தகவல்களை வெளிக்கொணரல்.

- வெற்றிகரமான கற்றல், கற்பித்தல் மதிப்பீட்டுச் செயற்பாடுகளுக்கான புதிய முறைமைகளை அறிமுகப்படுத்தல்.

- தொடர்பாடல், தகவல் தொழில்நுட்பம், தேசிய சர்வதேச மொழிகளுக்குரிய மாணவர்களின் தேர்ச்சிகளை விருத்தி செய்தல்.

- பல்லின மக்கள் தொகுதி உள்ளதும், பல்சமய, பல மொழிகளுடையதுமான சமூகத்தின், சமூக, விழுமியங்கள், கலாசாரங்களை விளங்கிக் கொள்வதற்கான தேர்ச்சிகளை மாணவர்களிடையே விருத்தி செய்தல்.

2011 ஆம் ஆண்டில் பின்வரும் விருத்திகள் இடம்பெற்றிருந்தன.

- செயற்படு ஆய்வின் மூலம் வெளிப்படுத்தப்பட்டதும் பரவற்படுத்தப்பட்டதுமானவைகளின் மூலம் ஆரம்பக் கல்வி ஆசிரியர்களின் தரவிருத்திக்கான நடவடிக்கைகளை, முன் பிள்ளைப் பருவ அபிவிருத்தி மற்றும் ஆரம்பக்கல்வித் துறை மேற்கொண்டிருந்தது.

- 07 மற்றும் 11 ஆம் தரங்களுக்குரிய புதிய பாடத்திட்டங்களுக்காக 1628 மாகாண, வலய பாடப் பணிப்பாளர்களதும் சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களும் பயிற்றுவிக்க்பபட்டனர்.

- தரம் 9 கணித பாடத்திட்டத்திற்கான செயல் நூலொன்றும் தரம் 10 இற்கான கணித பாடத்திற்கான இலத்திரனியல் உள்ளீடொன்றும் தயாரிக்கப்பட்டிருந்தன.

- 6 - 11 வரையான தரங்களுக்கு 15 கல்வி மென்பொருட்கள் வடிவமைப்புச் செய்யப்பட்டதுடன், (விஞ்ஞானம் 06, ஆங்கிலம் 04, புவியியல் 03, வரலாறு 02) விஞ்ஞானத்திற்குரிய மென்பொருட்கள் 04 விருத்தி செய்யப்பட்டன.

- 6 - 11 வரையான தரங்களுக்குரிய சுகாதாரமும் உடற்கல்வியும் பாடத்திற்கான தகவல் தொடர்பாடற் தொழில்நுட்பத் துணை நூல்கள் தயாரிக்கப்பட்டன.

- க.பொ.த. உயர் தரத்திற்குரிய 35 பாடங்களுக்குரிய கலைத் திட்டங்கள் பாட உள்ளீடுகளின் ஆய்விற்குப் பின் மறுசீரமைக்கப்பட்டன

- க.பொ.த. உயர்தர வகுப்புகளுக்குரிய இரசாயனவியல், பௌதிகவியல், உயிரியல் பாடங்களுக்குரிய செயன்முறை வழிகாட்டி நூல்கள் தயாரிக்கப்பட்டன.
- 12, 13 ஆம் தரங்களினதும் வளவாளர்கள், ஆசிரியர்களது, ஆற்றல்களை விருத்தி செய்வதற்கான நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டதுடன் இதன் மூலம் 5698 பேர் பயனடைந்திருந்தனர்.

- க.பொ.த. உயர்தரத்திற்குரிய தொழில்நுட்ப பாடங்களுக்கான 08 வள நூல்கள் தயாரிக்கப்பட்டிருந்தன.

- சைகை மொழிக்கான 02 இலத்திரனியல் கற்றல் சாதனங்களும் கற்றல் நூலொன்றும் தயாரிக்கப்பட்டிருந்தன.

- பிறையில் கல்வி சம்பந்தமான தேவை பற்றிய ஆய்வொன்று நடாத்தப்பட்டதுடன் அதன் மூலம் பிறையில் கல்விக்கான கற்றல் தொகுதியொன்றும் தயாரிக்கப்பட்டது.

- பிரிவெனாக் கல்விக்கான இருமொழிக் கல்விசார் மாதிரி உசாத்துணைத் தொகுதி யொன்றின் ஆரம்ப வரைபொன்று தயாரிக்கப்பட்டது.

- தகவல் தொடர்பாடற் தொழில்நுட்பத்தின் 2014 இன் கலைச் சொற்கள் இனங்காணப் பட்டதுடன் இதில் ‘p’ எழுத்து வரையிலான பணிகள் பூர்த்தியடைந்திருந்தனர்.

- தயாரிக்கப்படுகின்ற கலைத்திட்ட ஆவணங்களின் மொழித்தரத்தினை பேணிக் கொள்வதற்கான துறைகளுக்கிடையேயான ஆசிரியர் குழுவொன்று நியமனம் செய்யப்பட்டது.

- கல்விசார் இணைத்தளம் ஆரம்பிக்கப்பட்டதன் மூலம் நிறுவகத்தின் அனைத்து பாடத்திட்டங்களும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளும் வெப்தளத்தில் (Web) இணைக்கப்பட்டன.

## 4.1 2011 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட பாடத்திட்டங்கள்

| | |
|---|---|
| • இரஷ்ய மொழி | தரம் 10, 11 |
| • சீனமொழி | தரம் 10, 11 |
| • ஹிந்தி | தரம் 10, 11 |
| • சமஸ்கிருதம் | தரம் 10, 11 |
| • பாளி | தரம் 10, 11 |
| • ஜெர்மன் | தரம் 10, 11 |
| • ஜப்பானிய மொழி | தரம் 10, 11 |
| • வன்தொழில்நுட்பம் (சி) | தரம் 12, 13 |
| • இரசாயனவியல் (சி, த, ஆ) | தரம் 12, 13 |
| • பௌதிகவியல் (சி, த, ஆ) | தரம் 12, 13 |
| • உயிரியல் (சி, த, ஆ) | தரம் 12, 13 |
| • கணக்கீடு (சி, த, ஆ) | தரம் 12, 13 |
| • பொருளியல் (சி, த, ஆ) | தரம் 12, 13 |
| • வணிகக்கல்வி (சி, த, ஆ) | தரம் 12, 13 |

## 4.2 2011 ஆம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகள்

| | |
|---|---|
| • நாடகமும் அரங்கியலும் (த) | தரம் 6 |
| • புவியியல் (ஆ) | தரம் 7 |
| • நாடகமும் அரங்கியலும் (த) | தரம் 7 |
| • புவியியல் (ஆ) | தரம் 9 |
| • சித்திரம் (த) | தரம் 9 |
| • வரலாறு (ஆ) | தரம் 9 |
| • வாழ்க்கைத் தேர்ச்சியும் குடியியற் கல்வியும் (ஆ) | தரம் 9 |
| • விஞ்ஞானம் (ஆ) | தரம் 9 |
| • ஹிந்தி | தரம் 10 |
| • சமஸ்கிருதம் | தரம் 10 |
| • இரஷ்ய மொழி | தரம் 10 |
| • பாளி | தரம் 10 |
| • தொடர்பாடலும் ஊடகக்கல்வியும் (சி) | தரம் 10 |
| • நாடகமும் அரங்கியலும் (த) | தரம் 10 |
| • ஹிந்தி | தரம் 11 |
| • பாளி | தரம் 11 |
| • சமஸ்கிருதம் | தரம் 11 |
| • இரஷ்ய மொழி | தரம் 11 |
| • அரபு | தரம் 11 |
| • நாடகமும் அரங்கியலும் (த) | தரம் 11 |
| • விஞ்ஞானம் (இரசாயனவியற் உள்ளடக்கம்) (ஆ) | தரம் 11 |
| • அரபு | தரம் 12 |
| • கீழைத்தேய சங்கீதம் | தரம் 13 |
| • ஜப்பானிய மொழி | தரம் 12 |
| • கணக்கீடு | தரம் 12 |
| • வணிகக்கல்வி | தரம் 12 |
| • கணிதம் (த) | தரம் 12 |
| • விவசாய விஞ்ஞானம் (ஆ) | தரம் 12 |
| • பொது தகவல் தொழில்நுட்பம் (சி, த) | தரம் 12 |
| • உணவு விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் (த) | தரம் 12 |
| • ஹிந்தி | தரம் 12, 13 |
| • இந்து சமயம் | தரம் 13 |
| • இந்து நாகரிகம் | தரம் 13 |
| • இஸ்லாம் (சி, த) | தரம் 13 |
| • இஸ்லாமிய நாகரிகம் (சி, த) | தரம் 13 |
| • கிறிஸ்தவம் (சி, த) | தரம் 13 |
| • கிறிஸ்தவ நாகரிகம் (சி, த) | தரம் 13 |

- கிரேக்க உரோம நாகரிகம் (ஆ) தரம் 13
- சிங்களம் தரம் 13
- தமிழ் தரம் 13
- ஆங்கிலம் தரம் 13
- சமஸ்கிருதம் தரம் 13
- பாளி தரம் 13
- சீனமொழி தரம் 13
- ஜெர்மனிய மொழி தரம் 13
- இரஷ்யமொழி தரம் 13
- அரபு தரம் 13
- ஜப்பானிய மொழி தரம் 13
- மேற்கத்தைய சங்கீதம் தரம் 13
- நடனம் தரம் 13
- நாடகமும் அரங்கியலும் (த, சி) தரம் 13
- சித்திரம் (சி) தரம் 13
- பரத நாட்டியம் தரம் 13
- வரலாறு (சி, த) தரம் 13
- அரசியல் விஞ்ஞானம் (சி, த, ஆ) தரம் 13
- புவியியல் (சி, த, ஆ) தரம் 13
- அளவையியலும் விஞ்ஞான முறையும் (சி, த) தரம் 13
- தொடர்பாடலும் ஊடகக்கல்வியும் (சி) தரம் 13
- வணிகக்கல்வி (சி, த, ஆ) தரம் 13
- கணக்கீடு (சி, த, ஆ) தரம் 13
- வணிகப் புள்ளிவிபரவியல் (சி, த, ஆ) தரம் 13
- பொருளியல் (சி, த, ஆ) தரம் 13
- கணிதம் (சி, த, ஆ) தரம் 13
- இணைந்த கணிதம் (சி, த, ஆ) தரம் 13
- பௌதிகவியல் (சி, த, ஆ) தரம் 13
- இரசாயனவியல் (சி, த, ஆ) தரம் 13
- உயிரியல் (சி, த, ஆ) தரம் 13
- மின், இலத்திரனியற் தகவல் தொழில்நுட்பம் (சி, த) தரம் 13
- சிவில் தொழில்நுட்பம் (சி, த) தரம் 13
- மனைப்பொருளியல் (சி, த) தரம் 13
- உயிரியற் வளத்தொழில்நுட்பம் (சி, த) தரம் 13
- விவசாய விஞ்ஞானம் (சி, த, ஆ) தரம் 13
- விவசாயத் தொழில்நுட்பம் (சி, த) தரம் 13
- பொறியியற் தொழில்நுட்பம்(சி) தரம் 13
- தகவற் தொடர்பாடற் தொழில்நுட்பம் (சி, த, ஆ) தரம் 13
- உணவு விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் தரம் 13

## 4.3 2011 இல் தயாரிக்கப்பட்ட வள நூல்கள்

- வன்தொழில்நுட்பம் (சி) தரம் 12
- உயிரியற் வள தொழில்நுட்பம் (சி) தரம் 12
- மின், இலத்திரனியற் தகவல் தொழில்நுட்பம் (சி) தரம் 12
- மனைப்பொருளியல் (சி) தரம் 12
- விவசாய விஞ்ஞானம் (சி) தரம் 12

## 5.0 சேவைக்காலப் பயிற்சி

சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களும், பணிப்பாளர்களும், அதிபர்களும், ஆசிரியர்களுமாக 10 643 பேர் 2011 ஆம் ஆண்டில் தேசிய கல்வி நிறுவகத்தில் பயிற்சிகளைப் பெற்றுக் கொண்டிருந்தனர்.

- கிழக்கு, வடக்கு, வடமேல் மாகாணங்களில் இருமொழி கற்பித்தலில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்களுக்கும், பிரிவெனா மற்றும் அரசினால் உதவிகளைப் பெற்றுக் கொள்ளும் தனியார் பாடசாலைகளைளில் கற்பிக்கும் 36 பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் மாகாண நிர்வாகத்தின் ஒன்றிணைவுடன் இருமொழிக் கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் மேம்படுத்தப் பட்டன.

## 5.1 வாண்மை விருத்தி

கல்வித் துறையைச் சார்ந்தவர்களின் வாண்மை விருத்திக்காக கல்வி தலைமைத்துவ அபிவிருத்தி மற்றும் ஆசிரியர்க்கல்வி பீடத்தினால் பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. இப்பீடமானது பாடசாலை முகாமைத்துவத்துறை, ஆசிரியர் வலுவூட்டற்துறை, நிறுவன அபிவிருத்தித்துறை என்பவற்றினை தன்னகத்தே கொண்டு உருவாக்கப்பட்டது. இக்காலப் பகுதியில் கல்வித்துறை சார்ந்த 21334 பேர் அட்டவணை 1 இல் குறிப்பிட்டவாறு வாண்மை விருத்திக்கான பல்வேறு பாடநெறிகளில் மகரக மற்றும் மீபே வளாகங்களினூடாக கல்வி பெறுவதற்கான வாய்ப்பைப் பெற்றுக் கற்று வருகின்றனர்.

**அட்டவணை 01: தற்போதைய வாண்மை விருத்தி பாடநெறிகளில் விபரங்கள்**

| பாடநெறிகள் | பொறுப்பான துறை | பயிலுனர் களின் எண்ணிக்கை |
|---|---|---|
| **பட்டப்பின் படிப்பு கல்விப் பாடநெறிகள்** | | |
| கல்வித் தத்துவமாணிப் பாடநெறி 2008/2009, 2009/2010, 2011/2012 | ஆசிரியர் வலுவூட்டல் | 33 |
| கல்விமுதுமாணிப் பாடநெறி 2009/2011, 2010/2012 | ஆசிரியர் வலுவூட்டல் | 157 |
| எம்.எஸ்.சீ. கல்வி முகாமைத்துவம் 2009/2011, 2011/2013 | கல்வி முகாமைத்துவம் | 47 |
| **பட்டப்பின் டிப்ளோமாப் பாடநெறிகள்** | | |
| பட்டப்பின் கல்வி முகாமைத்துவ டிப்ளோமா (முழுநேர பாடநெறி - 2011/2012) | கல்வி முகாமைத்துவம் | 54 |
| பட்டப்பின் கல்வி முகாமைத்துவ டிப்ளோமா (பகுதிநேர பாடநெறி - 2011/2013) | கல்வி முகாமைத்துவம் | 85 |
| பட்டப்பின் படிப்பு கல்வி டிப்ளோமா - 2009/2010, 2011/2012, 2012/2013 | ஆசிரியர் வலுவூட்டல் | 8423 |
| பட்டப்பின் படிப்பு கல்வி பாடசாலை வழிகாட்டல் 2009/2010 | ஆசிரியர் வலுவூட்டல் | 30 |
| **பட்டப் பாடநெறிகள்** | | |
| கல்விமாணி (2007/2009, 2009/2011, 2011/2013) | ஆசிரியர் வலுவூட்டல் | 5120 |
| **டிப்ளோமாப் பாடநெறிகள்** | | |
| பாடசாலை முகாமைத்துவ டிப்ளோமா - 2010/2011 | பாடசாலை முகாமைத்துவம் | 204 |
| ஆரம்ப பாடசாலை முகாமைமத்துவ டிப்ளோமா (2011 தமிழ்) | | 71 |
| விசேட கல்வி டிப்ளோமா பாடநெறி 2010 | உட்படுத்தற் கல்வி | 71 |
| சைகைமொழி டிப்ளோமா - 2011 | உட்படுத்தற் கல்வி | 32 |
| இரண்டாம்மொழியாக ஆங்கிலத்தைக் கற்பிப்பதற்கான டிப்ளோமா | ஆங்கிலம் | 47 |
| முன் பிள்ளை அபிவிருத்தி ஆரம்பக்கல்வி டிப்ளோமா | ஆரம்பக் கல்வி | 37 |
| **சான்றிதழ் பாடநெறிகள்** | | |
| மேலதிக மொழி விருத்திப் பாடநெறி (2011/2013 - ALIC) | ஆசிரியர் வலுவூட்டல் | 1114 |
| **குறுங்காலப் பாடநெறிகள்** | | |
| கல்வி முகாமைத்துவம் தொடர்பான குறுங்காலப் பாடநெறி | கல்வி முகாமைத்துவம் | 1181 |
| கல்வி ஆய்வு தொடர்பான குறுங்காலப் பாடநெறி | ஆய்வு அபிவிருத்தி | 250 |
| **வெளிநாட்டு மாணவர்களுக்கான பாடநெறிகள்** | | |
| வாண்மைத்தேர்ச்சிக்கான பாடநெறி | கல்வி முகாமைத்துவம் | 50 |
| கல்விமாணி முகாமைத்துவ பாடநெறி (2009/2011, 2010/2013) | கல்வி முகாமைத்துவம் | 45 |
| **பட்டதாரியல்லாத ஆசிரியர்களுக்கான பாடநெறிகள்** | | |
| பட்டதாரியல்லாத பயிற்றப்படாத ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பாடநெறி | நிறுவன அபிவிருத்தி | 4367 |

♦ பாடநெறிகளை அமுல்ப்படுத்துவதிலுள்ள நடைமுறைப் பிரச்சினைகளின் காரணமாக இந்த இரண்டு பாடநெறிகளும் ஆங்கில மொழித் துறையினாலும் முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி ஆரம்பக் கல்வித்துறையினாலும் ஒருங்கிணைக்கப்படுகின்றன.

## கல்வியியற் கல்லூரிகளினதும் ஆசிரியர் பயிற்சி கலாசாலைகளினதும் தரவிருத்தி

தேசிய கல்வி நிறுவகமானது தேசிய கல்வியியற் கல்லூரிகளில் நடைபெறும் ஆசிரியர் கல்விக்கான கலைத்திட்டத்தினை விருத்தி செய்வதனையும் ஆசிரியர் பயிற்சி கலாசாலைகளில் நடைபெறும் சேவைக்கால ஆசிரிய பயிற்சி கலைத்திட்டத்திற்கும் பொறுப்பாக விளங்குகின்றது. கடந்த ஆண்டில் கீழ்வரும் நிகழ்வுகள் நடந்தேறின.

- 07 தேசிய கல்வியியற் கல்லூரிகளினதும் ஆரம்ப, பொது, விசேட உள்ளடக்கங்களுக்கான தேசிய கல்வியியற் கல்லூரிகளினது பாடத்திட்டங்கள் திருத்தியமைக்கப்பட்டதுடன் 10 விரிவுரையாளர்களுக்குத் தேவையான பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

- தேசிய கல்வியியற் கல்லூரிகளினதும் ஆசிரியர்க் கல்விக் கலாசாலைகளினதும் கண்காணிப்பிற்காக, ஓர் கண்காணிப்பு பொறிமுறை தயாரிக்கப்பட்டிருந்தது.

- தேசிய கல்வியியற் கல்லூரிகளினதும் ஆசிரியர் கல்வி கலாசாலைகளினதும் வாண்மை விருத்திக்கான தேவை பற்றிய ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், இதன்படி, 215 தேசிய கல்வியியற் கல்லூரிகளினது பணியினர்களுக்கு கல்விச் செய்முறைப் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

## வழிகாட்டலும் ஆலோசனையும்

2011 ஆம் ஆண்டில் பின்வரும் உள்ளக ஆலோசனை வழங்கற் செயற்பாடுகள் நடந்தேறின.

- 420 மாணவர்களுக்கு வழிகாட்டல் ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

- பெற்றோர்கள் 600, ஆசிரியர்கள் 50, 100 அக்கறை காட்டும் கட்சியினர்கள் என வழிகாட்டல் ஆலோசனைகளை பெற்றுக் கொண்டனர்.

- 03 பொது விரிவுரைகள் ஒழுங்கு செய்யப்பட்டதுடன் இதன்போது 1000 வரையான பங்குபற்றுனர்கள் வருகை தந்திருந்தனர்.

- மாணவர் வழிகாட்டல் ஆலோசனைகளுக்காக 15 செயற்படு ஆய்வுகள் நடத்தப்பட்டன.

- 120 வழிகாட்டல், ஆலோசனை சேவைக்கால ஆசிரியர் ஆலோசகர்களுக்கும், 47 விசேட கல்வி சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களுக்கும் ஆற்றலை விருத்தி செய்வதற்கான நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

## பரீட்சைகள் (தேசிய கல்வி நிறுவக பாடநெறிகள்)

2011 ஆம் ஆண்டில் தேசிய கல்வி நிறுவகம் தேங்கிக் கிடந்த அனைத்து பரீட்சைப் பெறுபேறுகளையும் வெளியிட்டிருந்தது. அத்தோடு பின்வரும் அடைவுகளும் இக்காலப்பகுதிக்குள் எய்தப்பட்டிருந்தன.

- 14 பரீட்சைகள் நடத்தப்பட்டன.
- 8343 பரீட்சார்த்திகளுக்கான பட்டப்பின் படிப்பு கல்வி டிப்ளோமா 2009/2010 தொகுதி மாணவர்களது முதலாம் வருட பரீட்சை பெறுபேறுகள் வெளியிடப்பட்டிருந்தன.
- முந்திய பரீட்சைகளுக்கான 1950 சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

## 6.0 மாற்றுக் கல்வி

### 6.1 திறந்த கற்றல்

முறைக்கல்வியை பல்வேறுபட்ட காரணங்களினால் தவறவிட்டவர்களின் கற்றல் வாய்ப்பை ஏற்படுத்துவதற்கு திறந்த பாடசாலைகள் துறை, தொலைக்கல்விப் பாடநெறிகளினூடாக அதனை மீளவும் வழங்குதவற்காக நிறுவப்பட்டுள்ளது.

இக்கற்பித்தலானது கல்வியை பயில்வு நாடிகளிடையே கொண்டு செல்வதற்காக, தொலைதூர மற்றும் திறந்த கல்வி அணுகுமுறைகள் பயன்படுத்தப்படுகின்றன. பயில்வு நாடிகளின் கல்வித் தகைமைகளைக் கருதாது தொழில் அல்லது சமூக தேவைகளுக்கிணங்க தமக்குப் பொருத்தமான கற்றல், கற்றல் முறை, எந்நிலையிலிருந்தும் கற்றலை ஆரம்பித்தல் என்பவற்றை தமக்கேற்றாற் போல் தெரிவு செய்வதற்கான வசதியையும், வாய்ப்பையும் திறந்த பாடசாலைகள் துறை வழங்கி வருகின்றது.

கடந்த வருடத்தில் இந்நிகழ்ச்சித் திட்டங்களினூடாக கீழ்வரும் திறந்த கற்றல் செயற்பாடுகள் நடத்தேறின.

- திறந்த இடைநிலைப் பாடநெறிகள் மூலமும், அத்திவாரக் கற்கைகளின் மூலமாகவும் 2150 பயனாளிகளுக்குக் கற்பதற்கான வாய்ப்புகள் வழங்கப்பட்டதுடன் இதில் 150 போதனாசிரியர்கள், 36 நிலையங்களினூடாக ஈடுபட்டிருந்தனர்.

- திறந்த இடைநிலைப் பாடநெறிகளுக்கு 3 சிங்கள மொழி மூலமானதும் 03 தமிழ் மொழி மூலமானதுமான குடும்ப, சமூக நலக் கல்வி மொடியுல்கள் எழுதப்பட்டன.

- 36 நிலையங்களினூடாக 33 நேர்முக அமர்வுகள் நடத்தப்பட்டன.

- திறந்த கற்றல் சம்பந்தமான செய்தியேடொன்று வெளியிடப்பட்டிருந்தது.

- 03 புதிய நிலையங்கள் நிறுவப்பட்டதுடன் இதில் 400 பயில்வு நாடிகள் புதிதாக சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

## 6.2 இலத்திரனியற் பரவற் துறை

தேசிய கல்வி நிறுவகம் பாடசாலைச் சமூகத்தினையும் வெளியகச் சமூகத்தினையும் கற்றல் சமூகத்தை நோக்கியதாக இட்டுச் செல்வதற்கும் கவர்ச்சிகரமாக கற்பிப்பதற்கும் ஏதுவான முறையில் இலத்திரனியல் கற்றல் சாதனங்களான அதாவது தொலைக்காட்சி, வானொலி, இறுவட்டு போன்ற கருவிகளை வழங்கி தனது அளப்பரிய பணியை மேற்கொள்கின்றது. பாடசாலைச் சமூகம் கலைத்திட்டத்தின் கடினமான எண்ணக் கருக்களை விளங்கிக் கொள்ளவும் தெளிவு பெறலுக்காகவும் பாடல், இசை, நாடகம் போன்ற அழகியல் முறைகளிலான பல்வேறுபட்ட நிகழ்ச்சிகளை தயாரித்தளித்துள்ளது.

2011 ஆம் ஆண்டில் பின்வரும் செயற்பாடுகள் நடந்தேறின.

- 537 நெனச நிகழ்ச்சிகள் ஒளிபரப்புவதற்காகக் கையளிக்கப்பட்டமை.

- ஆரம்ப, இடைநிலை கலைத்திட்டம், நடைமுறை விடயங்கள் தொடர்பான வானொலி நிகழ்ச்சிகளுக்கான பிரதிகளை எழுதுவதற்காக 79 விடய நிபுணர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர்.

- 48 ‘நிபுண’ வாராந்த ஒலிபரப்பு நிகழ்ச்சிகளும் ‘இது எங்கள் பாடசாலை’ பற்றி 24 நிகழ்ச்சிகளும் பூர்த்தியாக்கப்பட்டன.

- 01 செவிப்புல நிகழ்ச்சியும் 01 கட்புல செவிப்புல நிகழ்ச்சியும் தயாரிக்கப்பட்டதோடு, பாடசாலை பாதுகாப்புக் கல்வி தொடர்பாக ஊடகத்துறையினூடாக சுவரொட்டி போட்டியொன்றும் நடாத்தப்பட்டது.

- வகுப்பறையில் வீடியோவினை பயன்படுத்தல் தொடர்பாக 50 ஆசியரிகளுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டன.

## 6.3 உட்படுத்தற் கல்வி

அனைவருக்கும் கல்வி வழங்குவதற்கான எண்ணக்கருவின் இயக்கப்பாட்டை அடைந்துகொள்வதில் தேசிய கல்வி நிறுவகத்தின் உட்படுத்தற் கல்வித்துறை முன்னிற்கின்றது. விசேடத் தேவையுள்ள பிள்ளைகளுக்கு நிகழ்ச்சிகளை முன்னெடுத்தல், அவற்றை அமுல்படுத்தல், விசேட வழகாட்டற் சேவைகளைப் பெற்றோருக்கும் / பாதுகாவலருக்கும் வழங்குதல் போன்றவற்றினை இது மேற்கொண்டு வருகின்றது.

2011 ஆம் ஆண்டில் பின்வரும் செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.

- நிகழ்காலத் தகவல்களை பரவலாக்குவதற்கு உட்படுத்தற் கல்வி சம்பந்தமாக சஞ்சிகையொன்று வெளியிடப்பட்டது.
- இலத்திரனியல் கற்றல் சாதனமொன்றும் சைகைமொழிக் கற்றல் நூலொன்றும் தயாரிக்கப்பட்டன.
- தரம் 2 வாசிப்பு நூலிற்கான சைகை மொழி அகராதி தயாரிக்கப்பட்டன.
- பிறையில் கல்விக்காக 50 ஆசிரியர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர்.

### 6.4 நூலகம்

நிறுவக ஆளணியினரைத் தவிர தேசிய கல்வி நிறுவகத்தின் நூலகமானது பல்கலைக்கழக கல்வியாளர்கள், தேசிய கல்வியியற் கல்லூரிகளினதும் ஆசிரியர் கல்விக் கலாசாலைகளினதும் பணியணியினர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், ஏனைய கல்வியியலாளர்கள் என்ற வகையில் எல்லோரது கல்வி நோக்கங்களுக்காகவும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

நூலகத்தில் 2011 ஆம் ஆண்டில் பின்வரும் நூல்களும் இறுவட்டுகளும் புதிதாகச் சேர்க்கப்பட்டன.

| | |
|---|---|
| நூல்கள் | 1003 |
| கல்வி அறிக்கைகள் | 146 |
| கலைத்திட்ட சாதனங்கள் | 06 |
| உள்ளூர்ச் சஞ்சிகைகள் | 05 |
| வெளிநாட்டுச் சஞ்சிகைகள் | 06 |
| செய்தியேடுகள் | 10 |
| கல்வித் தகவல்களை உள்ளடக்கிய இறுவட்டுக்கள் | 30 |

## 7.0 ஆய்வு, திட்டமிடல் அபிவிருத்தி

தரமான கல்வியை நோக்காகக் கொண்டு இயங்கும் தேசிய கல்வி நிறுவகம் கலைத்திட்ட அபிவிருத்தி, வாண்மை விருத்தி, பல்வேறுபட்ட ஆய்வுத் திட்டங்களினூடாக கொள்கைகளை வகுத்தல் போன்றவற்றுக்கு பங்களித்து வருகின்றது. இந்தப் பணிகளானவை ஆய்வு அபிவிருத்தித்துறை மற்றும் திட்டமிடல் மதிப்பீட்டுத்துறை, வெளியுறவு அலகு என்பவற்றினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

### 7.1 ஆய்வு அபிவிருத்தி

ஆய்வு அபிவிருத்தித் துறையானது கல்வி ஆய்வினை விரிவுபடுத்தி அபிவிருத்தி செய்தல், முன்னெடுத்தல், கலந்துரையாடுவதற்கும் விவாதிப்பதற்கும் தேவையான கல்விப் பிரச்சினைகளுக்கான அடித்தளங்களை நிறுவுதல், கல்வி ஆய்வுக்கான திறன்களை விருத்தி செய்து கொள்ள முனையும் துறைசார்ந்தவர்களுக்காகப் பாடநெறிகளை நடத்தல், உதவி

நல்குதல், ஆய்வுத் தகவல்களை பகிரல் போன்ற பிரதான பணிகளை மேற்கொண்டு வருகின்றது.

பின்வரும் குறிப்பிடத்தக்க பணிகளை 2011 ஆம் ஆண்டில் ஆய்வு அபிவிருத்தித் துறையானது மேற்கொண்டிருந்தது.

- தரம் 9 இல் அமுல்படுத்தப்படும் புதிய கலைத்திட்ட மறுசீரமைப்பு சம்பந்தமான ஆய்வு அறிக்கை 2011 இல் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

- ஆய்வுக் கலைச் சொற்களும் கல்விக் கலைச் சொற்களும் கல்விச் சமூகத்தினை நோக்கியதாக ஆய்வு கண்டுபிடிப்புகளை பரவலாக்குதவற்காக விருத்தி செய்யப்பட்டன.

- தரம் 6 - 11 வரையிலான பாடசாலைக் கலைத்திட்டத்தில் அனர்த்த முகாமைத்துவ (DRM) பற்றிய நிலைக்குத்தான ஒன்றிணைப்பிற்கான ஆய்வறிக்கை பூரணப்படுத்தப் பட்டிருந்தது.

- சிறிய பாடசாலைகளின் முகாமைத்துவத்தினை பலப்படுத்துவதற்கான சிறிய பாடசாலைகளுக்கான வளப் பொதியொன்று விருத்தி செய்யப்பட்டிருந்தது.

- வகுப்பறை மட்டத்தில் விஞ்ஞானக் கல்வியின் அனர்த்த பாதுகாப்பு பற்றிய ஆய்வுகள் அடங்கிய இறுவட்டொன்று விருத்தி செய்யப்பட்டு, அறிவுறுத்தல் பயிற்சி மொடியுல்களை அடிப்படையாகக் கொண்டு 183 ஆசிரியர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டன.

- கல்வி ஆய்வு முறைகள் பற்றிய குறுங்காலப் பாடநெறிகள் இரண்டு கல்வி அமைச்சின் பணியணியினர், மாகாணப் பணிப்பாளர்கள் உட்பட 250 பேர்களுக்கு நடத்தப்பட்டது.

- சிங்கள மொழி மூலமான சி. டப்ளியு. டப்ளியு. கன்னங்கர நினைவுப் பேருரைகள் 12 அடங்கிய நூலொன்று தயாரிக்கப்பட்டன.

- வருடாந்த சி. டப்ளியு. டப்ளியு. கன்னங்கர நினைவுப் பேருரை, தேசிய கல்வி ஆணைக்குழுவின் முன்னாள் தலைவராகிய பேராசிரியர் ஏ. வி. சுரவீர அவர்களினால் ‘‘கலாநிதி கன்னங்கர அவர்களின் இலவசக் கல்வி முன்மொழிகளும் ரியுசன் முயற்சியின் பிற்கால விரிகையும்’’ என்ற தலைப்பில் 2011 ஒக்டோபர் மாதத்தில் நிகழ்த்தப்பட்டது.

## 7.2 திட்டமிடல் மதிப்பீடு

கிடைக்கக்கூடிய மனித பௌதிக வளங்களை வினைத்திறனாகவும் விளைத்திறனாகவும் பயன்படுத்தி தேசிய இலக்குகளுடன் இணைந்து தேசிய கல்வி நிறுவகத்தின் இலக்குகளையும் அடைந்து கொள்ளத்தக்க வகையில் 2011 ஆம் ஆண்டில் பின்வரும் செயற்பாடுகளை திட்டமிடற் மதிப்பீட்டுத்துறை நிறைவேற்றியிருந்தது.

- ஐந்தாண்டுத் திட்டத் தயாரிப்பு - 2011/2016
- வருடாந்த பாதிட்டுத் தயாரிப்பு - 2012
- வருடாந்த திட்டத் தயாரிப்பு - 2012
- 2010 ஆம் ஆண்டிற்கான முன்னேற்ற அறிக்கைத் தயாரிப்பு
- காலாண்டு முன்னேற்ற அறிக்கைகளின் தயாரிப்பு

## 7.3 வெளியுறவு முகவரலகு

வெளியுறவு முகவரலகு, ஆய்வுத் திட்டமிடல் மற்றும் அபிவிருத்திப் பீடத்தின் கீழ் இயங்கி வருகின்றது. இது ஊழியர் அபிவிருத்திக்கான வெளிநாட்டு நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கு செய்து வருகின்றது. இதை விட உலக வங்கியினால் ஒருங்கிணைக்கப்படுகின்ற செயற்றிட்டங்களான ESDG, ஆசிய அபிவிருத்தி வங்கியின் EKSP, GIZ நிறுவனத்தின் சமூக நல்லிணக்கம் மற்றும் அனர்த்த அபாய முகாமைத்துவம், யுனிசெப் நிறுவனத்தின் அடிப்படை மற்றும் ஆரம்பக் கல்வி என்பவற்றுக்குப் பொறுப்பாக விளங்கும் அலகாகும்.

பின்வருவன ஆளணி அபிவிருத்தியின் முக்கியமான பணிகளாக இடம்பெற்றவையாகும்.

- ஐக்கிய அமெரிக்காவின் வோல்டன் பல்கலைக்கழகத்தின் ஒன்றிணைவுன் நடாத்தப்பட்ட அதே நேர பட்டப்பின் படிப்பு அறிவுரைப்பு வடிவமைப்பு சான்றிதழ் பாடநெறியினை தேசிய கல்வி நிறுவகத்தின் 11 அதிகாரிகள் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருந்தனர்.

- இந்தியா, ஹைதரபாத் பல்கலைக்கழகத்திற்கு முதுத் தத்துவமாணி பட்டக் கற்கைக்காக அனுப்பப்பட்ட ஒரு அதிகாரி ஆங்கிலம் மற்றும் சர்வதேச மொழிகள் துறையில் தனது கற்கையைப் பூர்த்தி செய்திருந்தார்.

- கலைத்திட்ட அறிவுரைப்பு தொடர்பில் முதுமாணிக் கற்கையைத் தொடருவதற்கு மலேசியா புத்ரா பல்கலைக்கழகத்திற்கு அனுப்பப்பட்ட இரண்டு தேசிய கல்வி நிறுவக அதிகாரிகள் தங்களது 1 வருட பாடநெறிப் பகுதியைப் பூர்த்தி செய்து நாடு திரும்பினர்.

- வசதிப்படுத்தல் திறன்களை விருத்தி செய்வதனை மையப்படுத்தி தேசிய கல்வி நிறுவக 06 பிரதான ஊழியர்களுக்காக பயிற்சி நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

- 12 அதிகாரிகளுக்கு, வெளியுறவுகள் முகவரலகினூடாக கருத்தரங்குகள், செயலமர்வுகளில் பங்குபற்றுவதற்குத் தேவையான ஒழுங்குகள் செய்யப்பட்டன.

## 8.0 பொது, நிதி மற்றும் தொழில்நுட்ப நிர்வாகம்

பொது, நிதி மற்றும் தொழில்நுட்ப பிரிவின் பணியானது நிதி, பௌதிக, முகாமைத்துவ சேவைகளையும், துணைச் சேவைகளையும், கலைத்திட்ட அபிவிருத்தி, வாண்மை விருத்தி, அனைவருக்கும் கல்வி, ஆய்வுத் திட்டமிடல் அபிவிருத்தி போன்ற பீடங்களுக்காகப் பெற்றுக் கொடுப்பதாகும். நிர்வாகத் துறையானது பொது, நிதி மற்றும் தொழில்நுட்ப நிர்வாக பீடத்தின் ஒரு பிரிவாக இயங்கி வருவதுடன் இது சகல நாளாந்த நிர்வாக நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்குப் பொறுப்பாக உள்ளது. அத்தோடு ஊழியர்களின் பயிற்சித் தேவைகளை இனங்கண்டு அவர்களுக்கு அவசியமான பயிற்சிகளை உள்நாட்டில் வழங்குகின்றது. நிதித் துறையானது அனைத்துத் தேவைகளுக்குமான நிதி வளங்களை வழங்குதல்; வருமானச் செலவின் அறிக்கைகளை நிதிப் பிரமாணங்களுக்கமைய பேணி அறிக்கையிடல் என்பவற்றை மேற்கொள்கின்றது. பொறியியற் துறையானது கல்வி செயற்பாடுகளுக்கு அவசியமான பௌதிகச் சூழலை பேணுவதையும் நிறுவகத்தின் கட்டிட நிர்மாணம், பேணுகைப்பணிகள், மின்சார, தொலைபேசிச் சேவைகள், உட்கட்டமைப்பு வசதிகளுக்கான ஒதுக்கீடுகள், துப்புரவாக்கல், பாதுகாப்புச் சேவைகளை ஒருங்கிணைத்தல் போன்றவற்றை மேற்கொண்டு வருகின்றது.

இத்துறைகளினால் மேற்கொள்ளப்பட்ட முன்னேற்றச் செயற்பாடுகள் பின்வரும் 8.1 - 8.3 வரை தரப்படுகின்றது.

### 8.1 பொது நிர்வாகம்

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் தேசிய கல்வி நிறுவகத்திலுள்ள ஆளணி வெற்றிடங்களை நிரப்புவதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. இதன்படி உள்ளக பதவியுயர்வுகளுக்கான முன்னெடுப்புகளை நிர்வாகத் துறை மேற்கொண்டிருந்தது. இதன்படி 2011 ஆம் ஆண்டில் 51 பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

- உள்ளக ஊழியர்களுக்கான பதவியுயர்வுகள் கீழ்வருமாறு மேற்கொள்ளப்பட்டிருந்தன.

| | |
|---|---|
| செயற்றிட்ட அதிகாரிகள் | 21 |
| செயற்றிட்ட உதவியாளர்கள் | 02 |
| தட்டச்சாளர்கள் | 02 |

- புதிய ஆட்சேர்ப்புகள் கீழ்வருமாறு இடம்பெற்றிருந்தன.

| | |
|---|---|
| உதவிப் பணிப்பாளர் நாயகர்கள் | 02 |
| பணிப்பாளர்கள் | 08 |
| உதவிச் செயற்றிட்ட அதிகாரிகள் | 03 |
| பராமரிப்பு அதிகாரிகள் | 01 |
| உள்ளக கணக்காய்வாளர் | 01 |
| கணக்காய்வு உதவியாளர் | 01 |
| அலுவலக உதவியாளர் | 05 |

- 16 கல்விசார் ஆளணியினரின் இளைப்பாற்றுகைக்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

| | |
|---|---|
| உதவிப் பணிப்பாளர் நாயகர்கள் | 03 |
| பணிப்பாளர்கள் | 06 |
| பிரதம செயற்றிட்ட அதிகாரிகள் | 07 |

- நிறுவகத்தின் 26 கல்விசார் மற்றும் கல்விசாரா ஊழியர்களுக்குக் கற்கை விடுமுறையும் நிதி உதவியும் வழங்கப்பட்டன.

- 67 நிறுவக ஆளணியினர்களுக்கு ஆங்கில மொழி விருத்திப் பாடநெறி நடத்தப்பட்டது.

## 8.2 நிதித்துறை

- நிலையான சொத்துக்களின் பதிவும் மதிப்பீட்டு நடைமுறைகளும் பூர்த்தியாக்கப்பட்டு முழுமைப்படுத்தப்பட்டன.

- நிறுவக நிதி நடைமுறைகளை வினைத்திறனான முறையில் மேம்படுத்திக் கொள்வதற்கான புதிய கணினிப் பொதியொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

- 2011 ஆம் ஆண்டிற்கான அளவையீட்டுப் பணிகள் பூர்த்தியாக்கப்பட்டிருந்தன.

## 8.3 பொறியியற் சேவைகள் துறை

2011 ஆம் ஆண்டு நிறைவடையும் பொறியியற் சேவைகள் துறையினால் கீழ்வரும் செயற்பாடுகள் பூரணப்படுத்தப்பட்டிருந்தன.

- குறித்த காலம் வரை இடிதாங்கி இல்லாமலிருந்த பிரதான கட்டிடத் தொகுதியிலுள்ள இரண்டு கட்டிடஙகளுக்கும் நூதனசாலைக்கும் இடிதாங்கிகள் பொருத்தப்பட்டன.

- இரண்டு உதவிப் பணிப்பாளர் நாயகர்களுக்கும் செவிப்புல ஊடக நிலையத்திற்கும் காற்றுச் சீராக்கிகள் பொருத்தப்பட்டன.

- 45 அலகுகளுக்குப் புதிய தொலைபேசி தொகுதிகள் விநியோகிக்கப்பட்டன.

- மகரகமவிலுள்ள பாய்ச்சும் இயந்திரத்தொகுதிக்கான சீராக்கும் தொகுதி மறுசீரமைக்கப் பட்டு விருத்தி செய்யப்பட்டது.

- அலுவலக உபகரணங்கள் மறுசீரமைக்கப்பட்டது.

- மகரகம, மீபே வளாகங்களினது ஒழுங்கமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

- தேசிய கல்வி நிறுவகத்தின் களஞ்சியமும் சிற்றூழியர் விடுதிகளும் தொற்று நீக்கப்பட்டன.

- 18 கட்டிடங்கள், 6 மலசலகூடங்கள், நீர்த்தாங்கி, தீயணைப்பு ஒழுங்குகள், பக்கச் சுவர்கள் என்பன மறுசீரமைக்கப்பட்டன.

## 8.4 அச்சிடலும் வெளியிடுகையும்

2011 ஆம் ஆண்டில் பின்வரும் வெளியீடுகள் நிறுகத்தினால் மேற்கொள்ளப்பட்டன.

- 36 நூல்கள், ஆய்வுச் சஞ்சிகைகள் மற்றும் ஆய்வு வெளியிடுகைகள்

- 37 மொடியுல்கள்

- 24 ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகள்

- 110 வேறு நூல்கள்

# විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
## கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
## AUDITOR GENERAL'S DEPARTMENT


| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல<br>My No | சிஈ/ஜே/என்ஜஈ/2011/எப்ஏ/01 | ඔබේ අංකය<br>உமது இல<br>Your No. | | දිනය<br>திகதி<br>Date | 2012 யூலை 31 |

பணிப்பாளர் நாயகம்,
தேசிய கல்வி நிறுவகம்,

**தேசிய கல்வி நிறுவகத்தின் 2011 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2) (சீ) பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

தேசிய கல்வி நிறுவகத்தின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசோட்டக்கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1985 இன் 28 ஆம் இலக்க தேசிய கல்வி நிறுவக அதிகாரச்சட்டத்தின் 19 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த அறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம், ஒரு விபரமான அறிக்கை 2012 யூன் 20 ஆந் திகதி பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.


අංක 306/72 පොල්දූව පාර, බත්තරමුල්ල , ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla , Sri Lanka

දුරකථනය / தொலைபேசி / Telephone 2887028 -34
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No. 2887223
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / E-mail. oaggov@sltnet.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவனத்தினால் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில் கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தேசிய கல்வி நிறுவகத்தின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்குகளை சமர்ப்பித்தல்

வரைவு நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு பரிசோதனைகளின் போது வெளியாகிய கணக்குகளில் குறைத்துக் காட்டல்களான ரூபா 455,211 தொகையும் அதிகரித்துக்காட்டல்களான ரூபா 4,915,820 தொகையும் சுட்டிக்காட்டப்பட்டதன் பின்னர் இறுதி நிதிக்கூற்றுக்கள் திருத்தப்பட்டு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டது.

#### 2.2.2 பெறவேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பாடசாலைகளில் மதிப்பீட்டு வினாத்தாள் அச்சீட்டு நடவடிக்கைகளுக்காக 3 ஆண்டுகாலத்திற்கு மேலான காலமாக கல்வி அமைச்சிடம் இருந்து

அறவிடப்பட வேண்டியதாகக் காணப்பட்ட ரூபா 3,237,799 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்படுவதற்கு முடியாதிருந்தது.

(ஆ) வழமையான முற்பணங்களின் கீழ் காண்பிக்கப்பட்ட 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 28,302 தொகையும், 4 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 60,431 தொகையும் மீளாய்வாண்டின் இறுதியின் போதும் தீர்க்கப்படுவதற்கு முடியாது தொடர்ந்தும் முன்கொண்டுவரப்பட்டிருந்தது.

**2.2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | விபரம் |
|---|---|
| (அ) தாபன விதிக் கோவை | |
| XV ஆம் அத்தியாயத்தின் 3.1, 4.2 மற்றும் 4.3 ஆம் பிரிவுகள் மற்றும் xii ஆம் அத்தியாயத்தின் 14.2 ஆம் பிரிவு | (i) தகுதிகாண் காலத்தில் உத்தியோகத்தர்களுக்கு வெளிநாட்டு கற்கைகளில் ஈடுபடுவதற்கு சம்பளத்துடனான லீவைப் பெற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகள் இல்லாத போதிலும் தகுதிகாண் காலத்தில் இருந்த உதவி செயற்திட்ட உத்தியோகத்தர் ஒருவருக்கு 2007 செப்தெம்பர் 01 ஆம் திகதி முதல் 2009 ஆகஸ்ட் 31 வரை சம்பளத்துடனான லீவு அங்கீகரிக்கப்பட்டு அம் முழுக் காலத்திற்கான சம்பளமாக ரூபா 650,160 தொகை செலுத்தப்பட்டிருந்தது. லீவு அங்கீகரிக்கப்படுகையில் நிறுவகத்தினால் அவரிடமிருந்து முறையான பிணை முறிக்கு கையொப்பம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| xii ஆம் அத்தியாயத்தின் 23.1 மற்றும் 23.2 ஆம் பிரிவு | (ii) | மேற்குறித்த உத்தியோகத்தரினால் 2009 செப்தெம்பர் 01 ஆம் திகதி முதல் 2011 ஆகஸ்ட் 31 வரையான காலப்பகுதிக்கு வெளிநாட்டு லீவு அங்கீகரித்துக் கொள்ளப்படாது மீண்டும் வெளிநாட்டிற்குச் சென்றிருந்ததுடன் அக் காலப்பகுதி சம்பளமற்ற லீவாகக் கருதப்பட்டு நிறுவகம் நடவடிக்கை எடுத்திருந்தது. அக் காலப்பகுதியின் 5 மாதங்களுக்கான சம்பளம், ஊழியர் சேமலாப மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியமாக அவருக்கு ரூபா 154,640 தொகை நிறுவகத்தினால் செலுத்தப்பட்டிருந்தது. |
| v ஆம் அத்தியாயத்தின் 7 ஆம் பிரிவு | (iii) | லீவினை அங்கீகரித்துக்கொள்ளாது சேவைக்கு வருகைதராத மேற்குறித்த உத்தியோகத்தர் 2009 செப்தெம்பர் 01 ஆம் திகதி முதல் சேவையை விட்டு விலகிச் சென்றதாகக் கருதி நிறுவகம் செயற்பட்டிருக்கவில்லை. |

(ஆ) அரசாங்க நிதிப் பிரமாணம்

| | |
|---|---|
| 371(2) மற்றும் (5) ஆம் பிரிவுகள் | குறித்த பணிக்கான உப கட்டுநிதியின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணங்கள் உரிய பணி நிறைவேற்றப்பட்டதனை உடனடுத்து தீர்க்கப்பட வேண்டிய போதிலும் நிறுவகத்தின் விநியோக உத்தியோகத்தருக்கு 8 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்ட ரூபா 226,517 தொகையான முற்பணங்களைத் தீர்ப்பதற்காக 5 மாதங்கள் முதல் 8 மாதங்கள் வரையான காலம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணங்களைத் தீர்ப்பதில் 2012 பெப்ரவரி மற்றும் மார்ச் மாதம் வரை தாமதமாகியிருந்தது. |

| | |
|---|---|
| 394(ஆ) மற்றும் (ஈ)<br>396 (ஆ) மற்றும் (ஈ)(i) | 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வழங்கப்பட்டு 6 மாதங்கள் கடந்திருந்த போதிலும் வங்கியில் சமர்ப்பிக்கப்பட்டிராத ரூபா 478,865 பெறுமதியான 338 காசோலைகள் இரத்துச் செய்யப்பட்டு வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் அக் காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| 446(2) | நிறுவகத்தினால் பராமரிக்கப்பட்டு வருகின்ற சிறுபராய அபிவிருத்தி நிலையத்தில் கல்வி பயிலும் சிறார்களின் உணவுச் செலவினத்திற்காக 2011 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் ரூபா 20,000 தொகையான கட்டுநிதி விடுவிக்கப்பட்டிருந்ததுடன் ஆரம்ப அரையாண்டின் போது 16 சந்தர்ப்பங்களின் போது ரூபா 206,379 தொகையான செலவினம் மீளளிக்கப்பட்டிருந்தன. நிதிப் பிரமாணங்களின் பிரகாரம், இப் பெறுவனவுகளையும் கொடுப்பனவுகளையும் பதிவு செய்வதற்காக பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை. |
| 770 மற்றும் 772 | மத்திய களஞ்சியத்தில் 2010 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வின் போது கண்டறியப்பட்டவாறு பயன்பாட்டிற்கு எடுக்கப்பட முடியாத ரூபா 2,287,699 பெறுமதியான 42 வகையான பொருட்களை விற்பனை செய்வதற்கும் ரூபா 355,515 பெறுமதியான 50 வகையான பொருட்களை அழிப்பதற்கும் மெய்மையாய்வு சபை அறிக்கையின் மூலம் பரிந்துரைக்கப்பட்டிருந்த போதிலும் 2011 ஆம் ஆண்டின் போது பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்படும் வரை அப் பரிந்துரைக்கப்பட்ட செயற்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. |

### 2.2.4 போதிய அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) தேசிய கல்வி நிறுவகத்தின் பராமரிப்பு உத்தியோகத்தர் (மின்சாரம்) பதவிக்காக வெளி விண்ணப்பதாரி ஒருவர் 2011 மே 15 ஆம் திகதி முதல் சேர்த்துக்கொள்ளப்பட்டு அப் பதவியின் அங்கீகரிக்கப்பட்ட ஆரம்ப சம்பள கட்டமான ரூபா 26,970 இற்குப் பதிலாக 5 சம்பள கட்டங்களால் உயர்த்தி ரூபா 30,195 சம்பளத் திட்டத்தில் வைக்கப்பட்டிருந்தது. தாபனவிதிக்கோவையின் VII ஆம் அத்தியாயத்தின் 3 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம், இதற்காக நிறுவகப் பணிப்பாளரின் முன் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 சனவரி 23 ஆம் திகதி பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பிரகாரம், 2011 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு மெய்மையாய்வு தலைவருக்கு ரூபா 1,500 தொகையும் பொருள் மெய்மையாய்வு அங்கத்தவருக்கு ரூபா 1,000 தொகையுமாக கொடுப்பனவுகள் செலுத்தப்படுவதற்கு ரூபா 293,000 தொகை செலவிடப்பட்டிருந்தது. உரிய மெய்மையாய்வு நடவடிக்கைகள் உத்தியோகபூர்வ நேரத்தின் போது மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் கொடுப்பனவுகளையோ அல்லது வேறு நிதி நலன்களையோ செலுத்துதல் தொடர்பாக 1994 யூன் 14 ஆம் திகதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களின் பிரகாரம் இதற்காக முறையான அங்கீகாரம் பெறப்பட்டமை குறித்து கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்படவில்லை.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவு ரூபா 41,078,116 மிகையாக இருந்ததுடன், முன்னைய ஆண்டிற்கான இதற்கு நேரொத்த பற்றாக்குறை ரூபா 48,544,103 ஆகக் காணப்பட்டது. முன்னைய

ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதிசார் விளைவுகளில் ரூபா 89,622,219 ஆன அதிகரிப்பு ஏற்படுவதற்கு செயற்பாட்டு வருமானம் ரூபா 74,472,104 ஆல் அதிகரித்தமையும் வழங்கல் மற்றும் நுகர்வுப் பொருட்களின் செலவினங்கள் ரூபா 12,098,309 ஆலும் செயற்பாட்டுச் செலவினங்கள் ரூபா 9,759,450 ஆலும் குறைவடைந்திருந்தமையும் முக்கியமாகத் தாக்கமளித்திருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) திறந்த பாடசாலை பிராந்திய நிலைய நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் பிராந்திய கற்பித்தல் நிலையங்களில் நடாத்தப்படும் பாடநெறிகளுக்காக மனை மற்றும் சமூக கல்வி பாடத்திற்காக சிங்கள மற்றும் தமிழ் மொழிகளில் தயாரிக்கப்பட்ட 54 அலகுகளில் 34 அலகுகள் 2011 திசெம்பர் 31 ஆம் திகதி வரை அச்சிடப்பட்டிருக்கவில்லை. அவ் அலகுகள் கற்பவர்களிற்குக் கிடைக்கப்பெறாமையால் அப் பாடநெறிகளில் இருந்து எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்கள் உரிய முறையில் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிறுவகத்தினால் பரீட்சை திணைக்களத்திற்கு உரித்தான வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்திலுள்ள வருடாந்த பரீட்சைகளில் ஓர் தொகையினை நடாத்தல், விடைத்தாள்களை மதிப்பிடல் மற்றும் முடிவுகளை வெளியிடுதல் ஆகியவற்றை ஆண்டின் போதே மேற்கொள்வதற்குத் திட்டமிட்டிருந்த போதிலும் 2009 ஆம் ஆண்டின் போது நடாத்தப்பட்ட மூன்று பரீட்சைகளினதும் 2010 ஆம் ஆண்டின் போது நடாத்தப்பட்ட பரீட்சை ஒன்றினதும் முடிவுகளை வெளியிடுவதற்கு 12 மாதங்கள் முதல் 23 மாதங்கள் வரையான கால தாமதம் செய்யப்பட்டிருந்தமையால் திட்டமிடப்பட்டவாறு நடவடிக்கைகள் நிறைவேற்றப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

4.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கல்வித் துறையில் ஈடுபட்டுள்ள தலைவர்களை பலப்படுத்தல் மற்றும் முகாமைத்துவத்தை அறிமுகம் செய்வதனை நோக்காகக் கொண்டு அச்சிடப்படும் " கல்வி முகாமைத்துவ" சஞ்சிகையின் 2007, 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளுக்கு உரித்தான 16, 17, 18 மற்றும் 19 ஆகிய வலயங்களில் அச்சிடப்பட்ட அளவுகளில் முறையே 74% , 74%, 87% மற்றும் 87% வீதமானவை 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் களஞ்சியத்தில் எஞ்சியிருந்தது. அந்த எஞ்சிய இருப்புகளின் கிரயத்தின் பெறுமதி ரூபா 899,800 ஆகக் காணப்பட்டதுடன் அவ் வெளியீடுகளை விற்பனை செய்வதற்கோ அல்லது இலக்கிடப்பட்ட குழுக்களிற்கு பகிர்ந்தளிப்பதற்காக முறையான வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1999, 2000, 2001 மற்றும் 2002 ஆம் ஆண்டுகளின் போது கல்வி நடவடிக்கைகளுக்காக வெளிநாட்டிற்குச் சென்ற 8 உத்தியோகத்தர்கள் மீள சேவைக்கு வருகை தராமையால் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட வேண்டியிருந்த தண்டப்பணம் மற்றும் பிணை முறிகளின் பெறுமதி ரூபா 11,172,910 ஆனதுடன் நிறுவகத்தினால் தாமதமின்றி அந்த தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிராமையாலும் சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதில் தாமதம் ஏற்பட்ட காரணத்தினாலும் பிற்காலத்தில் அவ் உத்தியோகத்தர்கள் தொடர்பான தகவல்களை தேடிக்கொள்ள முடியாதிருந்தது.

(இ) தேசிய கல்வி நிறுவகத்திற்கு வழங்கப்பட்டிருந்த முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் 2006 நவம்பர் 30 ஆம் திகதிய டீஎம்எஸ்/டீ/ஐ/என்ஐஈ/எஸ்ஏ ஆம் இலக்க கடிதத்தின் vi ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவகத்தின் பதவியணிக்கான ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடைமுறை திருத்தப்பட்டு அத் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டுமென

அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் 2011 திசெம்பர் 31 ஆம் திகதி வரை அந்த நடைமுறை திருத்தப்பட்டு அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நிறுவகத்தினால் நடாத்தப்பட்டு வரும் ஆரம்ப சிறுவர் பராய அபிவிருத்தி மற்றும் ஆராய்ச்சி மத்திய நிலையத்தின் நடவடிக்கைகளுக்காக 4 ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்களும் 2 உதவிச் சேவை சமையலாளர்களும் நாளாந்த மற்றும் துண்டு அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். நிறுவகத்தின் ஆரம்ப கல்வி திணைக்களத்தின் கீழ் 20 ஆண்டுகளுக்கும் மேலான காலமாக காணப்பட்டு வருகின்ற இந்த நிலையத்தின் பதவியணித் தேவைப்பாட்டின் படி அப் பதவியினை அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடக்குவதற்கும் இதன் படி முறையாக ஆட்சேர்ப்பினை மேற்கொள்வதற்கும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) (i) 2007 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளின் போது அச்சிடப்பட்டிருந்த கிரயப் பெறுமதி ரூபா 4,350,644 தொகையான 6, 7, 10 மற்றும் 11 ஆம் தரங்களுக்கான ஆசிரியர் வழிகாட்டல்கள் மற்றும் 64 பாடவிதானங்களிற்கு உரித்தான 52921 பிரதிகளும் கிரயத்தினை இனங்காண முடியாத ஆசிரியர் வழிகாட்டல் மற்றும் 78 பாட விதானங்களுக்கு உரித்தான 35257 பிரதிகளும் பாடசாலைகளுக்கு பகிர்ந்தளிக்கப்படாது 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் அசையாத இருப்புகளாக புத்தகக் களஞ்சியத்தில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) கிரயம் கண்டறியப்படாத 93 உயர் தரப் பாடவிதானப் புத்தகங்களுக்கு உரித்தான 70157 பிரதிகள் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் ஆசிரியர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படாது புத்தகக் களஞ்சியத்தில் மிகுதி இருப்பாகக் காணப்பட்டன. அப் புத்தகங்களின் கிரயம் கணிப்பிடப்பட்டு 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(iii) பாடசாலைகளில் இலவசமாக பகிர்ந்தளிக்கப்படுவதற்கு இருந்த 2009 ஆம் ஆண்டின் போது அச்சிடப்பட்ட 3, 4, 5 ஆம் தரத்திற்கான ஆங்கில கதைப் புத்தகங்களில் 20 வகைகளுக்கு உரித்தான 108381 பிரதிகள் பாடசாலைகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படாது மிகுதி இருப்பாக 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் களஞ்சியத்தில் காணப்பட்டன. இதற்காக செய்யப்பட்ட கிரயம் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்பட்டிருக்க வில்லை.

## 4.3 செயற்பாட்டுத் திறமையீனங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) (i) நிறுவகத்தின் பொருட் பதிவேடு மற்றும் நுகர்வுப் பொருள் இருப்புகளினது நிலையினை நாளதுவரையாக்குவதற்காக பரிந்துரைகளைச் சமர்ப்பிப்பதற்கு 2010 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்ட குழு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட மெதுவாக விநியோகிக்கப்படும் ரூபா 3,180,745 பெறுமதியான 32 இருப்புப் பொருட்களின் 24691 அலகுகள் விநியோகிக்கப்படாது 5 – 10 ஆண்டு காலமாக களஞ்சியத்தில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்ததுடன் 10 ஆண்டுகளுக்கு மேல் பழமைவாய்ந்த ரூபா 186,590 பெறுமதியான இருப்பும் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேலும் களஞ்சியத்தில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) குழு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு 1 வருடம் கடந்திருந்த போதிலும் அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட ரூபா 441,380 பெறுமதியான 42 காலாவதியான பொருள் விடயங்களை கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் களஞ்சியத்தில் வைத்துக்கொள்ளப் பட்டிருந்தது.

(ஆ) கல்வி அமைச்சின் 2009 மே 18 ஆம் திகதிய 2009/16 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் 2009 ஆகஸ்ட் முதல் ஆரம்பிக்கப்படும் க.பொ.த (உயர் தர) புதிய பாடத்திட்டத்தின் 3 பாடங்களிற்குரிய ஆங்கில மொழிமூல ஆசிரியர் கைநூலும் 2 பாடங்களுக்கு உரித்தான தமிழ் மொழிமூல ஆசிரியர் கைநூலில் உள்ளடக்கப்பட்ட இறுவட்டுக்கள் தயாரிக்கப்பட்டு அச்சீட்டிற்காக 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நீண்டகாலமாக மத்திய களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள 496 பழைய டயர்களையும் 105 டியுப்களையும் கைதவிர்ப்படுவதற்கு 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறும் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் அதனூடாக களஞ்சியக் கிரயத்தைக் குறைத்துக் கொள்வ்து தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. வருடாந்த பொருள் மெய்மையாய்வின் போது இது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் இது வரை ஏற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நுகர்வுப் பொருள் தேவைப்பாட்டின் படி கட்டளையிட்டு குறுகிய காலத்திற்குள் பயன்பாட்டிற்காக மீள வழங்கப்படும் முறையொன்றை பின்பற்றப்படாது 11 வகைப் பொருட்களில் மிகை இருப்புகள் பேணப்பட்டிருந்தன. இவ் இருப்பில் 10 ஆண்டுகளுக்கு மேல் பழமைவாய்ந்த ரூபா 28,842 பெறுமதியான 19109 அலகுகள் மண்ணிறக் கடதாசி (Brown Paper)இருப்பு 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காலாவதியாகும் நிலையில் காணப்பட்டன.

## 5. கணக்கீட்டு நடவடிக்கைகள் மற்றும் நல்லாட்சி

### 5.1 கொள்வனவுத் திட்டம்

நிறுவகத்தினால் ஆண்டின் போது ரூபா 50,275,852 தொகையான மூலதனச் சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் கொள்வனவு நடைமுறை வழிகாட்டலின் 4.2 ஆம் பந்தி மற்றும் 2006 மார்ச் 24 ஆம் திகதிய தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை இல. 128 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக கொள்வனவு திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

2011 ஆம் ஆண்டின் பாதிடப்பட்ட செலவினங்களை உள்ளபடியான தரவுகளுடன் ஒப்பிடப்படுகையில் 18% முதல் 56% வரை பொருண்மையான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு பயனுள்ள நிதிக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்திக்கொள்ளப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது பணிப்பாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. இதற்கு மேலதிகமாக பின்வரும் கட்டுப்பாட்டுக் பரப்புக்கள் தொடர்பாக மேலும் கவனம் கோரப்படுகின்றது.

(i) களஞ்சிய கட்டுப்பாடு

(ii) புத்தகங்களும் நூல்களை அச்சிடலும்

(iii) பாதீட்டுக் கட்டுப்பாடு

(iv) கல்விக்கான வெளிநாட்டுப் பயணங்கள்

(v) பரீட்சைகளை நடாத்தலும் முடிவுகளை வெளியிடுதலும்

ஒப்பம்: எச். ஏ. எஸ். சமரவீர

கணக்காய்வாளர் தலைமை அதிபதி

*Ms/v*

## நிதிக் கூற்றுக்கள் தொடர்பான குறிப்புகள்

**குறிப்பான கணக்கீட்டுக் கொள்கைகள்**

**1.1 பொது**

நிறுவகத்தின் வெளியிடப்பட்டுள்ள பெறுபேறுகளும் நிதி நிலைமையும் கடந்த காலங்களில் பயன்படுத்தப்பட்ட பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

12 வெளிநாட்டுச் செலாவணி மாற்றம் - சகல வெளிநாட்டுச் செலாவணி கொடுக்கல் வாங்கல்களும், அக்கொடுக்கல் வாங்கல்கள் செய்யப்பட்ட சந்தர்ப்பத்தில் காணப்பட்ட மாற்ற விகிதங்களின்படியே மாற்றம் செய்யப்பட்டன.

**1.3 சொத்துக்களும் அவற்றின் மதிப்பீட்டு அடிப்படைகளும்**

**1.3.1 கடன்பட்டோரும் ஏனைய பெறவேண்டியவையும ;**

பெறவேண்டியவை, எதிர்பார்க்கப்பட்ட தேறத்தக்க பெறுமானங்களில் முன்னெடுக்கப்பட்டுள்ளன. ஐயப்பாடான பெறவேண்டியவை தொடர்பாக, ஆண்டின் இறுதியில் குறிப்பான அளவுகளின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டது.

**1.3.2 ஆதனங்கள், பொறித்தொகுதி, உபகரணங்கள் தேய்வு**

சொத்துக்கள் கிரயத்தின் அல்லது மீள் பெறுமதித் தொகையிலிருந்து திரண்டதேய்வை கழிக்கப் பதிவு செய்யப்பட்டது. கிரயமானது, சொத்தைப் பெற்ற போது செய்யப்பட்ட நேரடியான செலவுகளாகும். தேய்வு பதிவு செய்யப்பட்ட பெறுமதியிலிருந்து ஆண்டுக்கு பின்வரும் வீதங்களில் ஒதுக்கப் பட்டது. அவற்றின் பயன்படு வாழ்க்கைக்கால மதிப்பீட்டின்படியே இது செய்யப்பட்டது.

| | |
|---|---|
| அலுவலக தளபாடம் உபகரணங்கள் | 10% |
| கணினி உபகரணங்களும் | $33\frac{1}{3}\%$ |
| நூல்கள், பருவகால சஞ்சிகைகள் | 10% |
| மோட்டார் சைக்கிள், சைக்கிள் (துவிச்சக்கரவண்டி) | 20% |
| பொறித்தொகுதி இயந்திரங்கள் | 10% |
| மோட்டார் வாகனங்கள் | 20% |
| கட்டடங்கள் | 5% |
| ஒளிப்பிரதி இயந்திரங்கள் | 10% |

**1.3.3 பதிவேட்டுப் பொருள்கள்**

பதிவேட்டுப் பொருள்கள், தாழ் கிரயத்தில் அல்லது தேறத்தக்க தேறிய பெறுமானங்களில் மதிப்பிடப்பட்டுள்ளன.

### 1.3.4 காசும் காசுக்குச் சமமானவையும்

கையிலுள்ள காசு, வழிக் காசு, வங்கிகளின் நடைமுறைக் கணக்கு மீதிகள் ஆகியனவே காசும் காசுக்கு சமமானவையுமாக வரையறுக்கப்பட்டுள்ளன.

### 1.3.5 காசுப் பாய்ச்சல்

நேரில் முறையைப் பயன்படுத்தியே காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப் பட்டுள்ளது.

## 1.4 கணக்கீட்டு அளிப்புக்கள்

நிறுவனத்தின் செலவுகளை ஈடுசெய்யும் அளிப்புக்கள், வருமானக் கூற்றின் வருமானமாக இனங்காணப்பட்டது. இது செலவு ஏற்பட்ட அதே காலப்பகுதியில் முறைமையான அடிப்படையில் செய்யப்பட்டது. நிறுவனத்தின் சொத்துக்களை ஈடுசெய்யும் அளிப்புக்கள் குறித்த சொத்துக்களின் பயன்தரு வாழ்க்கைக் காலத்தின் அடிப்படையில் கணிக்கப்பட்டது.

## 1.5 ஊழியர் நலன்கள்

### 1.5.1 பணிக்கொடை அளிப்பு

"1983 இன் 12 ஆம் இலக்க ஓய்வு பெறுவோருக்கான பணிக்கொடை" சட்டத்திலுள்ள செலுத்த வேண்டிய ஓய்வு பெறுவோருக்கான பணிக் கொடைக் களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டது. இது நிறுவனத்தில் இணைந்து கொண்ட சகல ஊழியருக்குமானதாகவும் அமையும். இதற்காக வெளிவாரியாக நிதியளிப்புக் கொண்டதோர் அட்டுறு வகையில் பெறுமானமளிக்கப்படுவதா இல்லை.

### 1.5.2 பங்களிப்புத்திட்டங்களை வகுத்தல்

ஊழியர் சேமலாபநிதி, ஊழியர் நம்பிக்கை நிதியம் ஆகியவற்றுக்கு பங்களிப்புச் செய்வதற்காக கடப்பாடு, வருமானக் கடத்தல் ஏற்பட்ட செலவாக இனங்காணப்பட்டுள்ளது.

## 1.6 நடைமுறைப் பொறுப்புகள்

கோரிக்கையின் பேரில் கொடுப்பனவு அல்லது ஐந்தொகை திகதியிலிருந்து ஒரு வருடத்துக்கான கொடுப்பனவு நடைமுறைப் பொறுப்புக்களுள் அடங்கும். நடைமுறையல்லாப் பொறுப்புக்களுள் அடங்குவனவாவன. ஐந்தொகை திகதி யிலிருந்து ஒரு வருட காலத்துக்கு அல்லது அதற்கு மேற்பட்ட காலத்துக்கு கொடுப்பனவு செய்ய வேண்டியவையாகும்.

## 1.7 ஐந்தொகைத் திகதிக்குப் பிந்திய நிகழ்வுகள்

ஐந்தொகைத் திகதிக்குப் பின்னர் இடம்பெற்ற பொருள் சார்ந்த நிகழ்வுகள் கவனத்திலெடுக்கப்பட்டு, கணக்குகளில் தேவையான இடங்களில் பொருத்தமான சீராக்கங்கள் செய்யப்பட்டது.

## 1.8 வருமானமும் செலவினங்களும்

### 1.8.1 வருமான இனங்காணல்

(i) வருமான செலவினக் கூற்றில், மீண்டும் வரும் செலவினங்களான அரச அளிப்புகள் காசு அடிப்படையில் இனங்காட்டப்பட்டது.

(ii) பரீட்சைகள், கருத்தரங்குகள், கற்கைநெறிகள் ஏனைய கல்வி சார்ந்த மற்றும் அங்கத்தவர்களின் செயற்பாடுகளை மிகை / குறைபாடுகள் அச்செயற்பாடு முடிவடைந்த ஆண்டின் வருமானக் கணக்கில் சேர்க்கப்பட்டது.

### 1.8.2 செலவினங்கள்

(i) நிறுவகத்தை நடத்திச் செல்வதிலும் நிதிச் சொத்துக்களை வினைத் திறனுடையதாக பேணுவதற்குமாக ஏற்பட்ட சகல செலவுகளும், மிகை (குறைபாடு) ஆக குறித்த ஆண்டுக்காக உள்ளடக்கப்பட்டன.

(ii) நிலையான சொத்துக்களைப் பெறல், விரிவுபடுத்தல், மேம்படுத்தி நிறுவகத்தின் வருமான மீட்டும் இயலளவை அதிகரிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் மூலதனச் செலவுக்காகக் கொள்ளப் பட்டன.

## 1.9 நிச்சயமற்ற நிலைமைகள்

பின்வரும் விவகாரங்களின் போது பொறுப்பின் அளவு நிச்சயமற்றதாகையால் ஏற்பாடுகள் செய்ய முடியவில்லை.

### 1.9.1

| | |
|---|---|
| 1. இல : 780/09/m | ரூபா 2,237,337 |
| 2. இல : 4801/ 05 / நிதி | ரூபா 2,947,755 |
| 3. திருமதி. ஏ. பி. எஸ். எஸ். பதிரண | ரூபா 4,056,527 |
| 4. திரு. எஸ். எம். எம். சேனநாயக்க | ரூபா 876,235 |

### 1.9.2 கீழ்வருவோருக்கான சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்படவுள்ளன.

| | |
|---|---|
| 1. திருமதி. கே. டப்ளியு. பீ. ஏ. வீரவர்த்தன | ரூபா 202,728 |
| 2. திரு. எம். தங்கவேல் | ரூபா 276,958 |
| 3. திருமதி. ஏ. பீ. கே. விஜயவர்த்தன | ரூபா 213,120 |
| 4. திருமதி. எஸ். ஆர். கஜதீர | ரூபா 262,250 |

**1.9.3 சொத்துக்களின் மதிப்பு ரூபா 202,189.60 ஆக காணப்பட்டதுடன் சட்ட நடவடிக்கைகள் முடிவடைந்ததன் பின்னர் சொத்தின் மெய்மையாக் கல்கள் நடைபெறுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.**

2.1 தேசிய கல்வி நிறுவகம் ஆரம்பத்திலிருந்து நிலையான சொத்துக்களுக் கான தேய்மானம் மூலதன அளிப்புகளிலிருந்து குறைக்கப்பட வேண்டும். மூலதன அளிப்புக்களானவை நிதியறிக்கைகளில் சீராக்கத்திற்குள்ளா மலிருந்தது. எனவே, கணக்கீட்டு நியமம் 24 இற்கு அமைவாக 2011 ஆம் ஆண்டிற்கு இத்தொகையானது சீராக்கப்பட்டதுடன், அதன்படி மீதிகள் கீழ்வருமாறு

| | | **சீராக்கத்திற்கு முன்** | **சீராக்கத்திற்கு பின்** |
|---|---|---|---|
| 1. ஆண்டிற்கான மிகை / பற்றாக்குறை | ரூபா | (27,711,565.95) | 41,078,115.58 |
| 2. மூலதன அளிப்புகளும் ஒதுக்கங்களும் (தேறிய) | ரூபா | 1,470,378,813.37 | 952,009,253.23 |
| 3. திரட்டு நிதியம் | ரூபா | (883,806,055.53) | (366,010,719.66) |

## தேசிய கல்வி நிறுவகம்
## 2011 டிசம்பர் 31 ஆம் திகதிக்கான நிதி அறிக்கை

| | குறிப்புக்கள் | 2011 ரூ. ச. | 2010 ரூ. ச. |
|---|---|---|---|
| சொத்துக்கள் | | | |
| சொத்துக்கள், இயந்திரங்கள், இணைப்பு | 1 | 731,455,431.10 | 722.494,439.19 |
| கூட்டுக: நடைபெறும் வேலைகள் | 1A | 6,652,325.99 | 4, 241,444.75 |
| | | 738,107,757.09 | 726,735,883.94 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| தொக்கு | 2, 2A | 21,735,420.14 | 24,151,139.62 |
| வர்த்தக மற்றும் கிடைக்க வேண்டியவை | 3, 3A | 69,625,866.53 | 69,834,495.80 |
| முன் கொடுப்பனவு | 4 | 908,202.92 | 117, 691.00 |
| காசும் காசுக்குச் சமனானவைகளும் | 5 | 120,000,000.00 | |
| வழிக்காசு (Cash in Trans) | 5A | 61,507,669.44 | 114,878,205.94 |
| | | 273,777,159.03 | 208,981,532.36 |
| மொத்தச் சொத்து | | 1,011,884,916.12 | 935,717,416.30 |
| **பொறுப்புகள்** | | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | |
| செலுத்த வேண்டியவை | 6 | 26,676,630.10 | 23,807,938.30 |
| கற்கை நெறிக்கான முற்பணப் பெறுவனவு | 7 | 38,325,000.00 | 17,000,000.00 |
| | | 65,001,630.10 | 40,807,938.30 |
| **நடைமுறையல்லாத பொறுப்புக்கள்** | | | |
| ஊழியர் பணிகொடைகளுக்கான ஒதுக்கு | 8 | 71,720,527.95 | 74,765,494.47 |
| மொத்த பொறுப்புக்கள் | | 136,722,158.05 | 115,573,432.77 |
| | | 875,162,758.07 | 820,143,983.53 |
| **தேறிய சொத்துக்கள்** | | | |
| திரட்டு நிதியம் | 9 | (366,010,719.66) | (868,177,698.26) |
| மூலதன ஒதுக்கம் | 10 | 952,009,253.23 | 1,411,079,790.03 |
| கடன் நிதியம் | 11 | 55,377,949.50 | 52,918,954.29 |
| மீள் கணிப்பு ஒதுக்கு நிதி | 12 | 233,786,275.00 | 224,322,937.47 |
| மொத்தத் தேறிய சொத்துக்கள் | | 875,162,758.07 | 820,143,983.53 |

நிதி அறிக்கைக் கொள்கைகளுக்கும் குறிப்புக்களுக்குமுரியவைகள் 03 தொடக்கம் 05 வரையான பக்கங்களில் தரப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள், நிதிக்கூற்றுக்களின் ஒரு பகுதியாகும்.

**சரியானதென உறுப்படுத்துகின்றேன்.** **அங்கீகரிக்கப்பட்டது**

**எஸ். கால்லகே**
**நிதிப்பணிப்பாளர்**

**பேராசிரியர். டப்ளியு. எம். அபேரத்ன பண்டார**
**பணிப்பாளர் நாயகம்**

**27 ஏப்ரல் 2012**
**தேசிய கல்வி நிறுவகம்**
**மகரகம**

## தேசிய கல்வி நிறுவகம்

## நிதிச் செயலடைவு விபரம்

### 2011 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் வருடத்துக்கானது

| | | 2011 | 2010 |
|---|---|---|---|
| | | ரூ. ச. | ரூ. ச. |
| **செயற்படு வருமானங்கள்** | குறிப்புக்கள் | | |
| மீண்டெழும் வருமானம் | 14 | 269,258,193.05 | 313,046,171,31 |
| ஏனைய வருமானங்கள் | 13(15-20) | 252,097,124.24 | 143,268,130.28 |
| | | 521,355,317.29 | 456,314,301.59 |
| **செயற்படு செலவு** | | | |
| ஆட்களுக்கான சம்பளங்கள் | 21 | 200,200,769.42 | 197,430,700.63 |
| போக்குவரத்துச் செலவுகள் | 23 | 4,534,766.37 | 9,710,818.77 |
| வழங்கல்கள் | 24 | 18,128,000.41 | 30,226,309.57 |
| பராமரிப்புச் செலவுகள் | 25 | 24,240,440.57 | 14,081,005.31 |
| ஒப்பந்தச் சேவைகள் | 26 | 151,704,770.83 | 150.080.951.85 |
| நிதிச் செலவுகள் | 26-1 | 25,606,817.52 | 33,707,341.80 |
| தேய்வுகளும் ஒதுக்குகளும் | 27 | 44,401,802.13 | 48,551,992.20 |
| ஏனைய செயற்படு மூலதனம் | 28 | 11,069,834.46 | 20,829,284.01 |
| செயற்படு செலவு மொத்தம் | | 479,887,201.71 | 504,618,404.14 |
| மிகை பற்றாக்குறை / செயற்பாடுகள் | | | |
| **மிகை (பற்றாக்குறை) செயற்பாடுகள்** | | | |
| நிதிக் கிரயம் | | 41,468,115.58 | (48,304,102.55) |
| சொத்து, பொறித்தொகுதி, உபகரண விற்பனை மூலம் பெற்றவை | | | |
| செயற்படா வருமானங்கள் (செலவுகள்) | 29 | (390,000.00) | (240,000,00) |
| மிகை / குறைபாடு விசேட உருப்படிகளின் காலப்பகுதிக்குரிய தேறிய மிகை / பற்றாக்குறை | | 41,078,115.58 | (48,544,102.55) |

நிதி அறிக்கைக் கொள்கைகளுக்கும் குறிப்புக்களுக்குமுரியவைகள் 3 தொடக்கம் 5 வரையான பக்கங்களில் தரப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள், நிதிக்கூற்றுக்களின் பகுதியாகும்.

**சரியானதென உறுப்படுத்துகின்றேன்.** **அங்கீகரிக்கப்பட்டது**

**எஸ். கால்லகே**
**நிதிப்பணிப்பாளர்**

**பேராசிரியர். டப்ளியு. எம். அபேரத்ன பண்டார**
**பணிப்பாளர் நாயகம்**

**27 ஏப்ரல் 2012**
**தேசிய கல்வி நிறுவகம்**
**மகரகம**

# 31 டிசெம்பர் 2011 இல் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப் பாய்ச்சல் கூற்று

| | 2011 | 2010 |
|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. |
| **செயற்படு வருமானங்கள் குறிப்புக்கள்** | | |
| பொதுச் செயற்பாடுகளிலான மிகை / குறை | 41,078,116 | (48,544,102) |
| காசல்லாத நடவடிக்கைகளுக்கான | | |
| **செம்மையாக்கல்கள்** | | |
| தேய்மானம் | 48,679,436 | 46,006,322 |
| ஊழியர் பணிக்கொடை ஒதுக்கம் | 6,895,794 | 1,774,929 |
| ஏனைய மூலதன மாற்றங்களுக்கு | (49,516,362) | 5,985,401 |
| தொழிற்படு மூலதனத்திற்கு | **47,136,984** | **5,222,550** |
| முந்திய செயற்பாட்டு நடவடிக்கைகள் | | |
| இருப்பு அதிகரிப்பு / (குறைவு) | 2,415,719 | (15,233,833) |
| பெறவேண்டியவைகளின் அதிகரிப்பு / (குறைவு) | (581,883) | (5,557,744) |
| ஏனைய நடைமுறைச் சொத்துக்கள் அதிகரிப்பு / (குறைவு) | (120,000,000) | 0 |
| செலுத்த வேண்டியவற்றின் அதிகரிப்பு / (குறைவு) | 24,193,692 | (18,353,663) |
| **செயற்படு மூலதனத்தினால் பெற்ற தேறிய காசுப் பாய்ச்சல்** | **(93,972,472)** | **(39,145,240)** |
| செயற்படு செயற்பாடுகளால் கிடைத்தவை | (46,835,488) | (33,922,690) |
| ஊழியர் பணிக்கொடைகளுக்கான கொடுப்பனவுக் கிரயம் | (9,968,426) | (6,142,350) |
| **செயற்பாடுகள் மூலம் கிடைத்த தேறிய காசு** | **(56,803,914)** | **(40,065,040)** |
| **முதலீட்டு நடவடிக்கைகள்** | | |
| சொத்து, இயந்திரத்தொகுதி, கூட்டுத்தொகை | (58,324,640) | (17,113,492) |
| முதலீட்டுச் செயற்பாடுகளுக்காக இடப்பட்ட தேறிய காசுப்பிரவாகம் | (58,324,640) | (17,113,492) |
| **நிதிச் செயற்பாடுகளின் மூலம் பெற்ற காசுப் பிரவாகம்** | | |
| மூலதன மானியங்கள், நன்கொடை | 59,299,023 | 24,500,000 |
| கடன் தொகை | 2,458,995 | 2,252,087 |
| **நிதிநடவடிக்கைளில் இட்ட மொத்தம்** | 61,758,018 | 26,752,087 |
| **தேறிய அதிகரிப்பு குறைவு காசும்** | (53,370,536) | (30,426,446) |
| காசுக்கு சமனானவைகள் | | |
| காசும் காசுக்குச் சமனானவைகளும் (வருட ஆரம்பம்) | 114,878,205 | 145,304,651 |
| **காசும் காசுக்கு சமனானவைகளும** | **61,507,669** | **114,878,205** |